வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959


Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 17.06.2024 திங்கட்கிழமை | இதழ் : 169 | பக்கங்கள் : 12




மாருதி Money Exchange (Pvt) Ltd.

இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06

T.P: 011 236 2086

இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 221 4433
076 284 4443

MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்

Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்

WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை

இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# வடக்கின் மின் உற்பத்தியை இந்தியாவுக்கு விற்க பேச்சு!

## பொருளாதாரத்துக்கு நன்மை என்கிறார் ஜனாதிபதி



மன்னார், ஜூன் 17


**வடக்கு மாகாணம் பசுமை சக்தியை பெருமளவில் கொண்டுள்ளது. குளங்கள், காற்றாலைகள், சூரிய சக்தி மூலம் மின் உற்பத்தி செய்யும் நிலையங்களை அமைப்பதன் மூலம் அதிக மின்சாரத்தை உற்பத்தி செய்யமுடியும். அதனை இந்தியாவுக்கும் ஏனைய நாடுகளுக்கும் விற்பனை செய்வதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்துக்கு பெரும் பங்களிப்பைப் பெறமுடியும் - இவ்வாறு தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மிகுதி மின்சாரத்தை இந்தியாவுக்கு விற்பது தொடர்பில் பேச்சு நடைபெறுகிறது என்றும் கூறினார்.**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று மன்னார் மாவட்டத்துக்கு வருகை தந்தார். மன்னார் மாவட்ட செயலகத்தில் நடந்த ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் உரையாற்றியபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

மூன்று தசாப்தகால யுத்தத்துக்கு முகம் கொடுத்த மன்னார் மாவட்டம் இன்று வளர்ச்சி கண்டு வருகிறது.

இந்த மாவட்டத்தின் விரிவான அபிவிருத்தி மூலம் இலங்கையின் பொருளாதாரத்துக்கு பெரும் பங்களிப்பை வழங்கும். 11



## தமிழ் பொது வேட்பாளர் உரிய நேரத்தில் முடிவு!

### தமிழ் அரசு கட்சி அறிவிப்பு

வவுனியா, ஜூன் 17

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தும் விடயத்தில் உரிய நேரத்தில் சரியான தீர்மானம் எடுக்கப்படும் என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சி அறிவித்துள்ளது.

தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு கூட்டம் வவுனியாவில் தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று நடைபெற்றது. கூட்டத்தின் முடிவில் கட்சியின் தீர்மானங்களை பேச்சாளர் சுமந்திரன் ஊடகங்களுக்கு அறிவித்தபோதே மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

## வழக்கை முடிவுறுத்துவதற்காக எதிராளிகள் ஒரு நிலைப்பாடு!

### தமிழ் அரசின் மத்திய குழு தீர்மானம்

வவுனியா, ஜூன் 17

இலங்கை தமிழ் அரசுக் கட்சி தொடர்பான வழக்கில் எதிராளிகள் அனைவரின் மறுமொழியையும் ஒரு நிலைப்பாடாக பதிவுசெய்து வழக்கை முடிவுறுத்த தீர்மானித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு கூட்டம் வவுனியாவில் தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்தின் பின்னர் மத்திய குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை கட்சியின் பேச்சாளர் 11



## 442 பேருக்கு காணி உறுதி ஜனாதிபதி வழங்கினார்!

மன்னார், ஜூன் 17

மன்னாருக்கு சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 442 பேருக்கு உறுமய திட்டத்தின் கீழ் காணி உறுதிப் பத்திரங்களை வழங்கி வைத்தார்.

நாடளாவிய ரீதியில் 20 இலட்சம் காணி உறுதிப்பத்திரங்களை வழங்குவதற்கான 'உறுமய' தேசிய செயல் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இதில், மன்னார் மாவட்ட மக்களுக்கு காணி உறுதிப் பத்திரங்களை வழங்கும் நிகழ்வு மன்னார் நகர மண்டப கேட்போர் கூடத்தில் நேற்று 11

## மடு தேவாலயத்துக்கு வருவோர் இடையூறின்றி வழிபட வசதிகள்

### ஜனாதிபதி ரணில் உறுதி

மன்னார், ஜூன் 17

மடு தேவாலயத்துக்கு வருவோர் இடையூறின்றி வழிபாட்டில் ஈடுபடுவதற்கான வசதிகள் ஏற்படுத்தப் படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

மடு மற்றும் சிவனொளிபாத மலை போன்ற புனித தலங்களுக்கான நுழைவு வீதிகள் அவற்றை 11

## தமிழ்த் தேசியப் பற்றாளர் டொக்டர் ஜெயகுலராஜா மறைவு



முல்லைத்தீவு, ஜூன் 17

தமிழர் உரிமை போராட்டத்துக்கு பெரும் பங்களிப்பு வழங்கிய வரும் முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் முன்னாள் பணிப் பாளருமான மருத்துவர் ரி. டபிள்யூ. ஜெயகுலராஜா காலமானார். வயது மூப்பு 11

## மாவையை கடிந்த சுமந்திரன் எம். பி!

வவுனியா, ஜூன் 17

தமிழ் அரசு கட்சியின் நேற்றைய மத்திய குழு கூட்டத்தில் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவை சுமந்திரன் கடுமையாக கடிந்தார் என்று தெரிய வருகின்றது. இதன்போது வரைமுறைகளை கடந்து கட்சியினர் நடந்து கொண்டனர் என்றும் அறிய வருகின்றது.

தமிழ் அரசு கட்சியின் மத்திய குழு 11

## ஐக்கிய தேசிய கட்சியுடன் 'டீல்' என்பது முழுப்பொய்!

### எதிர்க்கட்சி தலைவர் சஜித்

கொழும்பு, ஜூன் 17

ஐக்கிய மக்கள் சக்திக்கும் ஜனாதிபதிக்கும் பேச்சு நடந்து வருவதாக வாய்ச்சொல் தலைவர் லண்டன் சென்று குறிப்பிட்டுள்ளார். இது அப்பட்டமான பொய். திசைகாட்டிக்கும் யானைக்கும் இடையிலான 'டீலே' இன்று நாட்டிலேயே மிகப் பெரிய 'டீல்' சமீபத்தில் சுயாதீன தொலைக்காட்சியில் நிகழ்த்தப்பட்ட நாடகம் இதை நிரூபித்துள்ளது - இவ்வாறு கூறியுள்ளார் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் 11

நல்லிணக்கத்துக்கு வழி காணும்வரை

## தற்போதைய நிலையிலேயே 13ஆம் திருத்தம் பேணப்படும்

### அநுரகுமார லண்டனில் தெரிவிப்பு



லண்டன், ஜூன் 17

சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகங்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த புதிய முறைமை கண்டறியப்படும் வரை தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் மாகாண சபை முறைமை தற்போதைய வடிவத்திலேயே தொடரும் என்று அந்தக் கட்சியின் தலைவர் அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

லண்டனில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றிய அவர்,

இனப்பிரச்னைக்கு மாகாண 11

**உண்மைகள் புனிதமானவை, கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் முக்கிய வேட்பாளர்கள் இருவர் யாழ்ப்பாணம் வந்துபோன பின்னர் அவர்களின் கருத்துகள் தொடர்பாக தெற்கில் பலத்த கண்டனங்கள் கிளம்பியிருக்கின்றன.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவும் தேசிய மக்கள் சக்தி என்ற ஜே. வி. பியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்காவும் ஒரே கருத்தைத்தான் தெரிவித்திருந்தனர்.

இருவருமே அரசமைப்பு சட்டத்தில் இருக்கும் பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தப்போவதாக அறிவித்திருந்தபோதிலும் ஏனோ தெற்கில் சஜித் பிரேமதாஸவுக்கு எதிராகவே பலரும் கண்டனங்களை தெரிவித்து வருகின்றனர்.

விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோர் சஜித் பிரேமதாஸ பதின்மூன்றை கொடுக்கப்போகிறார் என்றும் பொலிஸ் அதிகாரத்தை கொடுப்பதன் மூலம் அவர் நாட்டை துண்டாடப்போகிறார் எனவும் கூக்குரலிடத் தொடங்கியிருக்கின்றனர்.

இதில் கவனிக்க வேண்டியது அவர்கள் கூக்குரல் இடுவதைப் பற்றியதல்ல, அவர்கள் எதற்காக சஜித் பிரேமதாஸவை மாத்திரம் இலக்கு வைத்து தாக்குதல் நடத்துகின்றனர் என்பது பற்றியே.

சஜித் சொன்ன அதேவிடயத்தையே அநுரகுமார திஸநாயக்காவும் சொல்லியிருந்தார். ஆனால், அவருக்கு எதிராக அவர்கள் யாருமே இதுவரை குரலை உயர்த்தவில்லை. இதன் பின்னணியில் இருக்கின்ற சூட்சுமங்களைத்தான் புரிந்துகொள்ள முடியவில்லை.

அதிலும் மகிந்த ராஜபக்ஷவின் தீவிர விசுவாசிகளில் ஒருவரான ரோஹித அபேகுணவர்த்தன, சஜித் நாட்டுக்கு துரோகம் செய்துவிட்டார் என்று வேறு புலம்பியிருக்கிறார். அவரும்கூட அநுரகுமாரவின் கருத்தைப் பற்றி கண்டுகொள்ளவே இல்லை. அவரின் தலைவர் மகிந்த ராஜபக்ஷ யுத்தம் முடிவடைந்த பின்னர், பதின்மூன்று பிளஸ் என்று அறிவித்தவர்தான். ஆனால், அவர் அவ்வாறு அறிவித்தபோதும் யாரும் கண்டனம் தெரிவிக்கவில்லை. காரணம் அவர் அப்படி அறிவித்தாலும் அதனை செய்யமாட்டார் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருந்ததுதான். இப்போதும் ஏன் இவர்கள் அநுரவின் வாக்குறுதியை கண்டுகொள்கிறார்கள் இல்லை என்றால், அவரும் தங்கள் தலைவரைபோல சொன்னாலும் செய்யமாட்டார் என்று நம்புகின்றார்களா? அல்லது இந்தப் பத்தியில் சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்ததுபோல, எல்லோருமே சேர்ந்து சஜித் மீது மட்டும் தாக்குதல் நடத்தி அவரை பலவீனப்படுத்துவதில் ஒற்றுமையாக இருக்கின்றனரா என்பதுதான் புரியவில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவருமே இவ்வாறு பல்வேறு கூட்டணிகளை அமைத்துக்கொண்டு எவர் எங்கே இருக்கிறார் என்பதை கண்டுகொள்ள முடியாதவாறு செயல்பட்டுக் கொண்டிருக்க, நமது தமிழ் அரசியல் பிரமுகர்களும் நாங்களும் தெற்குக்கு கொஞ்சமும் குறைந்தவர்கள் அல்ல என்பதை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

நேற்று முன்தினம் முன்னாள் மாகாண சபை உறுப்பினரான அனந்தி சசிதரன், தமிழ் பொது வேட்பாளராக போட்டியிட தான் தயாராக இருக்கிறார் எனவும் தன்னைவிட திறமையான ஒருவரை களத்தில் இறக்கினால் அதற்கு தான் ஆதரவு கொடுக்கவும் தயாராக இருக்கிறார் என்று வேறு தெரிவித்திருக்கிறார்.

அவர் இவ்வாறு அறிவித்தல் கொடுத்த பின்னர் அந்தச் செய்தியைப் படித்துவிட்டு மூத்த பத்திரிகையாளர் ஒருவர் தனது "எக்ஸ்" தளத்தில் பதிவிட்டிருக்கும் ஒரு சிறிய குறிப்பு இந்த ஊர்க்குருவின் கவனத்தைப் பெற்றிருந்தது.

"ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளராக களமிறங்க தயார் என வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் அனந்தி சசிதரன் அறிவித்திருப்பது, இந்த பொது வேட்பாளர் முயற்சி இறுதியில் கேலிக்கூத்தாக மாறும் என ஏற்கனவே கூறியிருந்தவர்களின் கூற்றை நிரூபித்துள்ளது." - இதுவே அந்த மூத்த பத்திரிகையாளரின் பதிவு.


ஏற்கனவே, தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் எம். கே. சிவாஜிலிங்கம் பொதுவேட்பாளர் தொடர்பாக தான் நடத்திய ஊடகவியலாளர்கள் மாநாட்டில், பொதுவேட்பாளர் ஒருவரை களம் இறக்குகின்ற முயற்சி தோல்வியில் முடிந்தால், சுயேச்சை வேட்பாளராக - அதாவது ஒரு தமிழ் வேட்பாளராக தான் களம் இறங்குவேன் என்று தெரிவித்திருந்தார். அதாவது பொதுவேட்பாளர் முயற்சி கைகூடவில்லை என்றால் தமிழ் பொது வேட்பாளராக அல்லாமல் சுயேச்சை வேட்பாளராக ஒரு தமிழ் வேட்பாளராக களம் இறங்குவேன் என்று அவர் தெளிவாக சொன்ன பின்னர், மறுநாள், "சிவாஜிலிங்கம் பொதுவேட்பாளராக களம் இறங்கத் தயராக இருப்பதாக அறிவித்திருக்கிறார். அவர் ஒரு நல்ல தெரிவு. அதனை நான் வரவேற்கின்றேன்" என்று தமிழ் மக்கள் கூட்டணித் தலைவர் க. வி. விக்னேஸ்வரன் எம். பி. அறிக்கை வெளியிட்டு அதனை கேலிக்கூத்தாக்க முயன்றார். இப்போது இன்னுமொருவர் புறப்பட்டிருக்கிறார். அவர் தன்னை வேட்பாளராக்குவதற்கு சொன்ன காரணங்கள் அவரை தெரிந்தவர்களுக்கு ஆச்சரியத்தைத் தந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

கடந்த பதினைந்தாம் ஆண்டு மைத்திரி - மகிந்த மோதலின் போது அவர் தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்து அறிக்கை வெளியிட்டது எதற்காக? அந்த அறிக்கையை தயாரித்தவர் யார் என்பதை தெரிந்தவர்களுக்கு அவரின் இந்த முயற்சியின் பின்னால் இருக்கும் சூட்சுமங்கள் புரியாமல் இருக்காது.

பொது வேட்பாளர் விவகாரம் இப்படியே மெல்லமெல்ல நகர்ந்து - சரியான பாதையில் சென்று கொண்டிருக்க, இன்னும் இது போன்றவ பல முயற்சிகளை அது சந்திக்கவேண்டியிருக்கும் என்பதும் தெரிந்ததுதான்.

- ஊர்க்குருவி.

## மன்னார் ஆயரிடம் ஆசி பெற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



மன்னார், ஜூன் 17

மன்னார் மாவட்டத்துக்கு வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மன்னார் ஆயரிடம் ஆசீர்வாதம் பெற்றார்.

பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக நேற்று ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மன்னாருக்கு வருகை தந்தார்.

முற்பகல் 10 மணிக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையை ஆயரின் இல்லத்தில் சந்தித்து உரையாடினார்.

இதன்போது, ஜனாதிபதி மன்னார் ஆயரிடம் ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டார். (ஐ)

## "யுக்திய நடவடிக்கை மூலமாக குற்றங்கள் 23 வீதம் குறைந்தது"

கொழும்பு, ஜூன் 17

பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட 'யுக்திய' விசேட நடவடிக்கையால் நாட்டில் குற்றச் செயல்கள் 23 வீதம் குறைக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வளிக்கப்பட்ட போதைப்பொருள் பாவனையாளர்களை அவர்களின் குடும்பங்களுடன் ஒன்றிணைக்கும் நிகழ்வு பத்தரமுல்லையில் நேற்று நடைபெற்றது. இதில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"யுக்திய நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து குற்றச்செயல்கள் 23 வீதம் குறைவதற்கு வழிவகுத்துள்ளது. மேல்மாகாணத்தில் அதிகளவு போதைப்பொருள் விநியோகிக்கப்படுவதாகவும், நுகேகொடை மற்றும் கல்கிசை பிரதேசங்களில் அதிகளவான பாதிப்புகள் காணப்படுகின்றன என்றும் அவர் கூறினார்.

இந்நிலையில், இந்த வருட இறுதிக்குள் குற்றச் செயல்கள் 50 வீதமாகக் குறையும். ஆறு மாதங்களுக்குள் 'யுக்திய'நடவடிக்கையின் மூலம் 5,000 போதைப்பொருள் வியாபாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். போதைப் பொருள் வலையமைப்பில் 90 வீதத்துக்கும் அதிகமானவற்றை அகற்றிவிட்டோம்" - என்றும் அவர் கூறினார்.

(ஐ)

## இலங்கை - சீனா உறவுகள் வட்டமேசை மாநாடு இன்று

கொழும்பு, ஜூன் 17

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான பல்துறைசார் இராஜதந்திர உறவுகள் தொடர்பில் வட்டமேசை கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை பீஜிங்கில் நடைபெறவுள்ளது.

இதில் பங்கேற்க வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜயசேகர தலைமையில் விசேட பிரதிநிதிகள் குழு அங்கு சென்றுள்ளது.

பீஜிங்கில் நடைபெறும் இந்த இரு தரப்பு கலந்துரையாடலில் சீன வெளியுறவு துணை அமைச்சர் சன் வெய்டாங் கலந்துகொள்வார்.

அரசியல், பொருளாதாரம், வர்த்தகம், முதலீடு மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட இருதரப்பு ஈடுபாட்டின் துறைகளில் முன்னேற்றம் குறித்து இதன்போது மீளாய்வு செய்யப்படவுள்ளது.

இதற்கு முன்னர் இத்தகையதொரு கலந்துரையாடல் 2023 மே மாதம் கொழும்பில் நடைபெற்றது. இலங்கை - சீன உறவுகள் மற்றும் கூட்டுத்திட்டங்கள் என்பவை தொடர்பில் முழுமையாக பெய்ஜிங்கில் கலந்துரையாடலில் மீளாய்வு செய்யப்படும். அத்துடன் இரு தரப்பு புதிய அணுகுமுறைகளுக்கான வாய்ப்புகள் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்படும் என்று தெரிய வருகின்றது.

(ஐ)

## இலவச அரிசிக்கு பணம் வாங்கும் அதிகாரிகள்!

### வவுனியா மக்கள் குற்றச்சாட்டு

வவுனியா, ஜூன் 17

ஜனாதிபதியின் திட்டத்துக்கு அமைய உதவி தேவைப்படும் குடும்பங்களுக்கு வழங்கப்படும் 10 கிலோ அரிசி பையை வழங்குவதற்காக 500 முதல் 1000 ரூபாயை வவுனியாவில் சில அதிகாரிகள் பெற்றுள்ளனர் என்று மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை அடுத்து குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் ஊட்டச்சத்து மட்டத்தை பேணுவதற்காக ஜனாதிபதியின் திட்டத்துக்கு அமைய அரிசி வழங்கும் தேசிய வேலைத் திட்டம் நாடு பூராகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில், வவுனியா பிரதேச செயலர் பிரிவில் எந்தவித சிட்டைகளுமின்றி 500 முதல் 1000 ரூபாயை கிராம சேவகர்கள், சமுர்த்தி அலுவலர்கள் பெற்றுள்ளனர். பணம் கொடுக்க முடியாததால் சிலர் அரிசி பையை பெறவில்லை என்றும் கூறப்படுகின்றது.

இது விடயத்தில் உரிய அதிகாரிகள் தலையிட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## மனைவியுடன் நடனமாடியவரை கழுத்தறுத்து கொன்றவர் கைது!

கொழும்பு, ஜூன் 17

தனது மனைவியுடன் நடன மாடிய இளைஞரை ஒருவர் கழுத்தை அறுத்து கொன்றார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறை - தொடங்கொட - ஜன உதான பகுதியைச் சேர்ந்த 20 வயது இளைஞரே இந்த சம் பவத்தில் உயிரிழந்தார்.

இளைஞரை கொன்றார் என்று கூறப்படும் நபர் அந்தப் பகுதியை சேர்ந்த பெண்ணை திருமணம் செய்துள்ளார். அவர்கள் இருவரி[illegible]த்தை அடுத்து இருவரும் பிரிந்து வாழ்கின்றனர்.

இந்த நிலையில், களுத்துறை மைதானத்தில் நடந்த இசை நிகழ்ச்சிக்கு சென்ற கொலை சந் தேகநபரின் மனைவி அவருடன் ஆடை தொழிற்சாலையில் பணி புரியும் இளைஞருடன் சேர்ந்து நடனமாடியுள்ளார்.

மனைவி இளைஞருடன் நட னமாடுவதை கண்ட சந்தேக நபர் அங்கு சென்று தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளார். இதைத் தொடர்ந்து அந்த இளைஞரின் கழுத்தை அறுத்துக் கொன்றார்.

சந்தேகநபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu 17.06.2024 திங்கட்கிழமை ඊළනාඩු
குரோதி வருடம், வைகாசி 03

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இந்த சவாலை ஏற்றுக்கொள்ள தயாரா?

பிளவுபடாத இலங்கைக்குள் உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சமஷ்டி அடிப்படையிலான அதியுச்ச அதிகாரங்கள் பகிரப்படுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும். இதனை தங்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பிரதான வேட்பாளர்கள் உறுதிப்படுத்த வேண்டும் - இவ்வாறு தமிழ் அரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் தெரிவித்திருக்கின்றார். சம்பந்தன், தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டுக்கு எதிராகப் பேசிவருவது தொடர்பில் இந்தத் தலையங்கத்தில் முன்னரும் பதிவு செய்திருக்கின்றோம் - இந்த சந்தர்ப்பத்தில் ஈழநாடு மீண்டும் ஒரு விடயத்தை எடுத்துரைக்கின்றது.

இதனை ஒரு பகிரங்க சவாலுக்குரிய விடயமாகவே முன்வைக்கின்றது. ஒருவேளை சம்பந்தன் கூறுவது போன்று எந்தவொரு வேட்பாளராவது தங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் சமஷ்டி கட்டமைப்பின் கீழ் (வடக்கு, கிழக்கு இணைந்தது) அரசியல் தீர்வு ஒன்றை வழங்குவதற்கு தயார் என்று அறிவிப்பார்களாக இருந்தால் அதன் பின்னர் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டுக்கு தேவையிருக்காது.

ஏனெனில், தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு ஏற்படுத்திய அதிர்வலையால்தான் அவ்வாறானதொரு நிலைப்பாட்டுக்கு ஒரு தென்னிலங்கை வேட்பாளர் வருகின்றார். ஆனால், ஒருவேளை எந்தவொரு வேட்பாளரும் அவ்வாறு குறிப்பிடாது விட்டால் - அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தோடு நின்றுவிட்டால் - அப்போது எந்த அடிப்படையில், தமிழ் மக்கள் ஒரு தென்னிலங்கை வேட்பாளருக்கு வாக்களிக்க முடியும்? இதற்கு சம்பந்தனின் பதில் என்ன? தமிழ் அரசு கட்சியின் பதில் என்ன?

இந்த சவாலை ஏற்றுக்கொள்ள இலங்கை தமிழ் அரசு கட்சி தயாரா? சம்பந்தன் கூறுவது போன்று நடைபெற்றால், தமிழ் மக்கள் குறித்த அந்தத் தென்னிலங்கை வேட்பாளருக்கு வாக்களிக்க முடியும். இல்லாதுவிட்டால், எவ்வாறு வாக்களிக்க முடியும்? தமிழ் மக்களை தென்னிலங்கை வேட்பாளர் ஒருவருக்கு வாக்களிக்குமாறு எவ்வாறு கூற முடியும்? அப்படியானதொரு சூழலில் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை விடவும் வேறு என்ன சிறந்த வழியுண்டு?

சம்பந்தனின் பதினைந்து வருடகால அரசியல் தீர்மானங்கள் அனைத்தும் படுமோசமான தோல்வியை சந்தித்திருக்கின்றன. இந்த நிலையில் அரசியல் ரீதியில் எவ்வாறான தீர்மானத்தை எடுக்க வேண்டும் என்று கூறுவதற்கான தார்மீக தகுதி சம்பந்தனுக்கு இல்லை. இதேபோன்று, அவரின்தலைமையை ஏற்றுக்கொண்டவர்களுக்கும் இல்லை.

எனினும், சம்பந்தனின் கூற்றை ஓர் அரசியல் நிலைப்பாட்டுக்கான அளவீடாக வைத்துக்கொள்ள முடியும். அந்த அளவீட்டின் அடிப்படையில் விடயங்கள் நடந்தால் நாம் அதனை ஏற்றுக்கொள்ளலாம். ஒருவேளை அவ்வாறு நடக்காதுவிட்டால் அனைவருமே தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டின் பக்கமாக அணிதிரள வேண்டும். இந்த சவாலை ஏற்றுக்கொள்ளும் தற்துணிவுடன் இலங்கை தமிழ் அரசு கட்சி இருக்கின்றதா?

## ஆரோக்கிய நடை பயணம்!

வடமராட்சி, ஜூன் 17

கனடா ஈ குருவி மற்றும் புதிய வெளிச்சம் அமைப்பினர் நடத்தும் ஆரோக்கிய நடைபயணம் இன்று நடைபெறவுள்ளது.

நீலப்பொருளாதாரம் என்ற கருப்பொருளில் இன்று காலை 5.20 மணிக்கு பருத்தித்துறை வெளிச்ச வீட்டுக்கு முன்பாக இந்த நடைபயணம் ஆரம்பமாகிறது.

வெளிச்ச வீட்டுக்கு முன்பாக ஆரம்பமாகும் நடைபயணம் கடற்கரை வீதியூடாக சுப்பர்மடம் சென்று அங்கிருந்து, சக்கோட்டை - திக்கம் - பொலிகண்டி ஊடாக வல்வெட்டித்துறையை அடையும் பின்னர், தொண்டைமனாறு ஊடக வளலாய் - மயிலிட்டி - காங்கேசன்துறை - மாவிட்டபுரத்தை அடையும். அங்கிருந்து மாதகல் சிவன் கோவிலில் முதல் நாள் பயணம் நிறைவடையும்.

பங்கேற்பவர்களுக்கான சிற்றுண்டி, காலை, மதிய உணவுகள் வழங்கப்படும். (ஐ-2)

## கட்டட திறப்பு விழா

வடமராட்சி, ஜூன் 17

அல்வாய் சிறீ லங்கா வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட புதிய கட்டடத் தொகுதி இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

பொறியியலாளரும் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினருமான அமரர் வே. சிவயோகன் குடும்பத்தினரின் நிதிப் பங்களிப்பில் அமைக்கப்பட்ட வே. சிவயோகன் மண்டபம் என்ற மாடிக் கட்டடமே திறந்து வைக்கப்படவுள்ளது.

வித்தியால அதிபர் ந. ஜெயரூபன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சி. சிறீசற்குணராஜா, சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலய கல்வி பணிப்பாளர் க. சத்தியபாலன், கௌரவ விருந்தினர்களாக கட்டட திணைக்கள பிரதி பிரதம பொறியியலாளர் வ. அரவிந்தன், வவுனியா தெற்கு வலய பிரதி கல்விப் பணிப்பாளர் திருமதி தாட்சாயினி வசீகரன் ஆகியோர் பங்கேற்பர். (ஐ-2)

## அலங்கார திருவிழா

தென்புலோலி குரும்பைகட்டி சாமுண்டிகாதேவி சமேத ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ளது.

இதில், 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 9 மணிக்கு வலந்து கட்டல் பூசை நடைபெறும். மறுநாள் 22 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பொங்கல் பூசை நடைபெறும். பிற்பகல் 3 மணிக்கு கடா ஆடுகள் ஏலத்தில் விற்கப் படும்.

2ஆம்திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு 1008 சங்காபிஷேகம் ஆரம்பமாகி நண்பகல் 12 மணிக்கும் மாலை 5 மணிக்கும் விசேட பூசைகள் நடைபெறும். தொடர்ந்து, சாமுண்டிகாதேவி சமேத ஞான வைரவ பெருமான் பரிவார மூர்த்திகளுடன் வீதியுலா வருவார். அன்றைய தினத்துடன் திருவிழா நிறைவுபெறும். (ஐ-2)

## அநுர - சஜித் இடையே இனி விவாதம் கிடையாது!

### தேசிய மக்கள் சக்தி அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 17

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸநாயக்கவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையே இனி எந்தவொரு விவாதமும் இல்லையென தேசிய மக்கள் சக்தியின் செயல்குழு உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

மேலும், "சஜித் பிரேமதாஸ அறிவித்த ஜூன் 06 ஆம் திகதியில் விவாதத்துக்கு தேசிய மக்கள் சக்தி ஒப்புக்கொண்டது. ஆனாலும் அதை எதிர்கட்சித் தலைவர் புறக்கணித்து விட்டார்.

இதிலிருந்து அவர் ஒரு விவாதத்தைக்கூட எதிர்கொள்ள முடியாத தலைவர் என்பது மக்களுக்கு தெரிந்திருக்கும். அதனால் இனி எந்தவொரு விவாதமும் இல்லை. இரு தலைவர்களுக்கும் இடையில் ஒரு விவாதத்தை மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அது புதிய அரசியல் கலாசாரமாக இருக்க வேண்டும்" என்றும் கூறினார். (ஐ)

## ருமேனியாவில் வேலை வாய்ப்பு எனக்கூறி ரூ. 1.3 கோடி மோசடி!

கொழும்பு, ஜூன் 17


ருமேனியாவில் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி ஒரு கோடியே 30 இலட்சம் ரூபாய்க்கு மேல் மோசடி செய்யப்பட்டமை தொடர்பில் தகவல்கள் வெளியாகியுள்ளன என்று வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மாத்தறையில் நிறுவனமொன்றை நடத்திச்சென்ற சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

சந்தேகநபர் ருமேனியாவில் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி பலரிடம் பண மோசடியில் ஈடுபட்டுள்ளார். அதன்படி 130 இலட்சம் ரூபாய்க்கும் அதிக தொகை பணத்தை அவர் மோசடி செய்துள்ளார் என்று இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்திற்கு 53 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று தெரிவிக்கப் பட்டது. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனி - 17 திங்கட்கிழமை
குரோதி வருடம் - ஆனி 03
நல்ல நேரம் : 06.30 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : ஏகாதசி




**மேடம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும்படி நடந்துக் கொள்வீர்கள். தொட்டது துலங்கும்.

**இடபம்**
புதிய திட்டங்கள் நிறைவேறும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களை கவர சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத்திறமை வெளிப்படும். கனவு நனவாகும் நாள்.

**மிதுனம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள்.

**கடகம்**
சவால்களில் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். வியாபாரத்தில் புதிய சரக்குகளை கொள்முதல் செய்வீர்கள். உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். நினைத்ததை முடிக்கும் நாள்.

**சிம்மம்**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். புது ஏஜென்சி எடுப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்தை முடிப்பீர்கள். திடீர் திருப்பங்கள் நிறைந்த நாள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடை தாமதம் ஏற்படும். முன்கோபத்தை தவிர்க்க வேண்டிய நாள்.

**துலாம்**
கணவன் - மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. எதிர்பாராத திடீர் பயணங்களின் செலவுகளால் திணறுவீர்கள். வியாபாரத்தில் பாக்கிகளை போராடி வசூலிப்பீர்கள். முன்னேறும் நாள்.

**விருட்சிகம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். ஆன்மிகப் பெரியோரின் ஆசி கிட்டும். உத்தியோகத்தில் அதிகாரிகள் உங்களுக்கு முன்னுரிமை தருவார்கள். சிறப்பான நாள்.

**தனுசு**
உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். உங்களை தவறாக நினைத்துக் கொண்டிருந்தவர்கள் சிலரின் மனசு மாறும். உங்கள் கை ஓங்கும். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**மகரம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். வியாபாரத்தில் சூட்சுமங்களைப் புரிந்து கொள்வீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சியான சூழல் ஏற்படும். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சாதாரணமாகப் பேசப் போய் சண்டையில் முடியும். வியாபாரத்தில் எதிர்பார்த்த பணம் தாமதமாக வரும். மறைமுக விமர்சனங்கள் உண்டு. அலைச்சல் அதிகரிக்கும்.

**மீனம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் சந்தை ரகசியங்களை தெரிந்துகொள்வீர்கள். உத்தியோகத்தில் புதிய வாய்ப்புகள் தேடி வரும். நன்மைகள் உண்டாகும் நாள்.

# தேர்தலை புறக்கணிக்க தே. மு. தி. க. தீர்மானம்

சென்னை, ஜூன் 17


அ. தி. மு. கவை தொடர்ந்து அந்தக் கூட்டணியில் அங்கம் வகித்துள்ள தே. மு. தி. கவும் விக்கிரவாண்டி சட்டப்பேரவை தொகுதி இடைத் தேர்தலை புறக்கணிப்பதாக அறிவித்துள்ளது.

இது தொடர்பில், தே. மு. தி. க. வெளியிட்டுள்ள அறிக்கையில், விக்கிரவாண்டி இடைத் தேர்தலை தேசிய முற்போக்கு திராவிட கழகம் புறக்கணிக்கிறது. இதுவரை தமிழகத்தில் நடந்த அனைத்து இடைத்தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல்களில் போட்டியிட்ட தே. மு. தி. க. விக்கிரவாண்டி தேர்தலை புறக்கணிக்கிறது. இன்றைய கால கட்டத்தில் ஆட்சியாளர்களின் அதிகாரத்தால் தேர்தல்கள் தவறாக நடதப்படுகிறது.



இந்த இடைத் தேர்தல் மீது நம்பிக்கை இல்லாத காரணத்தால் உழைப்பு, நேரம், பணம் அனைத்தையும் விரயம் செய்ய விரும்பவில்லை. எங்கள் தொண்டர்களின் உழைப்பை வீணடிக்க விரும்பாத காரணத்தால் தே. மு. தி. க. இந்த விக்கிரவாண்டி இடைத்தேர்தலை புறக்கணிக்கிறது. இன்றைய ஆட்சியர்களின் கரங்களில் தேர்தல் என்கின்ற ஜனநாயகம் மிகப்பெரிய கேள்விக்குறியாக்கப் பட்டுள்ளது என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## இந்தியா கூட்டணியை இனிமேல் ஸ்டாலின் வழிநடத்த வேண்டும்





கோவை, ஜூன் 17

இந்தியா கூட்டணியை தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் வழிநடத்த வேண்டும் என்று தி. மு. க. கூட்டணி கட்சித் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

கோவை கொடிசியா பகுதியில் கருணாநிதி நூற்றாண்டு நிறைவு விழா, 40 தொகுதிகளிலும் பெற்ற வெற்றிக்கு தமிழக மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா, வெற்றிக்கு வித்திட்ட முதல்வர் ஸ்டாலினுக்கு பாராட்டு விழா என முப்பெரும் விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த விழாவில் உரையாற்றியபோதே அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டனர். (எ)

## வெற்றிக்கணக்கு ஆரம்பிக்குமாம்

சென்னை, ஜூன் 17

விக்கிரவாண்டி இடைத் தேர்தல் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் வெற்றிக்கணக்கை ஆரம்பிக்கும் தேர்தலாக அமையட்டும். தடைகளையும் எதிர்ப்புகளையும் துணிவுடன் எதிர்கொண்டு தீவிர தேர்தல் களப் பணியாற்றிட கழக உடன்பிறப்புகளுக்கு அன்பு வேண்டுகோள் விடுப்பதாகவும் அ. ம. மு. க. பொதுச்செயலாளர் ரி. ரி. வி. தினகரன் தெரிவித்தார

## அ. தி. மு. கவின் முடிவுக்கு மேலிட உத்தரவே காரணம்

**சிதம்பரம் விமர்சனம்**

சென்னை, ஜூன் 17

விக்கிரவாண்டி இடைத்தேர்தலை புறக்கணிக்கும் அ. தி. மு. கவின் முடிவுக்கு, தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளரின் தேர்தல் வாய்ப்பை எளிதாக்க வேண்டும் என்ற “மேலிடத்தின்” உத்தரவே காரணம் என்று காங்கிரஸ் மூத்த தலைவர் ப. சிதம்பரம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் வலைத் தளபதிவில், இடைத்தேர்தலை புறக்கணிப்பது என்ற முடிவை அ. தி. மு. க. எடுத்திருக்கிறது. தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளரின் தேர்தல் வாய்ப்பை எளிதாக்க வேண்டும் என்ற “மேலிட” உத்தரவு அந்தக் கட்சிக்கு வந்துள்ளது என்பதற்கு அக்கட்சி எடுத்துள்ள முடிவே தெளிவான சான்று. தங்களுக்குப் பதிலாக பா. ம. கவை நிறுத்தி, பா. ஜ. கவும், அ . தி. மு. கவும் தி. மு. கவுக்கு எதிராக போட்டியிடுகின்றன. தி. மு. க. வேட்பாளர் அமோக வெற்றி பெறுவதை இந்தியா கூட்டணி உறுதி செய்ய வேண்டும் என்று தெரிவித்தார். (எ)

## இடைத்தேர்தல் புறக்கணிப்பு ஏன்?

**அ. தி. மு. க. பொதுச் செயலாளர் விளக்கம்**



மதுரை, ஜூன் 17

ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் ஜனநாயகப் படுகொலை நடந்தது. சுதந்திரமாக தேர்தல் நடக்காது என்பதால்தான் விக்கிரவாண்டி இடைத்தேர்தலை அ. தி. மு. க. புறக்கணிக்கிறது என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி விளக்கமளித்துள்ளார்.

அ. தி. மு. க. வலிமையோடு இருக்கிறது. தி. மு. க. ஆட்சிக்கு வந்தபிறகு ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல் நடந்தது.அந்த இடைத்தேர்தலில் ஜனநாயகப் படுகொலை நடந்தது. வாக்காளர்களை சுதந்திரமாக வாக்களிக்க விடாமல், ஆடு மாடுகளை பட்டியில் அடைப்பது போல் அழைத்துசென்ற காட்சியை பார்த்தோம். தேர்தல் ஆணைக்குழு அதனை கண்டு கொள்ளவில்லை.

அடுத்த சட்டமன்ற தேர்தலில் தி. மு. க. 200 இடங்களில் வெற்றி பெறும் என்று ஸ்டாலின் கூறுகிறார். அவரின் கனவு பலிக்காது. தமிழக மக்களை பொறுத்தவரை மத்தியில் யார் ஆட்சிக்கு வர வேண்டும், மாநிலத்தில் யார் ஆட்சிக்கு வர வேண்டும் என்பதை பிரித்து பார்த்து தான் வாக்களிக்கிறார்கள். பாராளுமன்றத் தேர்தல் வேறு, சட்டமன்ற தேர்தல் வேறு- என்றார். (எ)

## நீட் தேர்வை ஆதரிப்பதை மோடி கைவிட வேண்டும்

**ஸ்டாலின் வலியுறுத்தல்**

சென்னை, ஜூன் 17

சமூக நீதிக்கு எதிரான நீட் தேர்வை ஆதரிப்பதை பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு கைவிட வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

அண்மையில் நடந்த நீட் தேர்வு சர்ச்சைகளை மேற்கோள் காட்டி முதல்வர் ஸ்டாலின் தனது எக்ஸ் வலைத்தளபக்கத்தில் வெளியிட்ட பதிவில், “நீட் தேர்வு விவகாரத்தில் தற்போது எழுந்துள்ள சர்ச்சைகள் அதன் சமத்துவமின்மையை காட்டுகிறது. பல ஆயிரம் ஆண்டுகளாக கல்வி மறுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மாணவர்களின் முன்னேற்றத்துக்கு அதிக வாய்ப்புகளை வழங்க வேண்டும். மாறாக, ஒடுக்கப்பட்ட மாணவர்களுக்கான வாய்ப்பை நீட் தேர்வு தடுக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதித் தேர்தல்:

# பிரதான வேட்பாளர்களுடன் தனியாக பேச்சு நடத்துவோம்!

## இரா. சம்பந்தன் அறிவிப்பு



கொழும்பு, ஜூன் 17

**ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களுடன் தனித்தனியே பேச்சில் ஈடுபடவுள்ளதாக இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பெருந்தலைவரும்பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.**

கொழும்பு நாளிதழ் ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியிலேயே இந்தத் தகவலை வெளியிட்டார்.

அத்துடன், ரணில், சஜித், அநுர ஆகிய மூவரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப் போகின்றார்கள் என்றால் அவர்கள் தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கான தீர்வாக எவ்விதமான விடயங்களையும் கருமங்களையும் முன்வைக்கப்போகின்றார்கள் என்பதை தமது விஞ்ஞாபனங்களில் வெளிப்படுத்த வேண்டும்.

அதன் பின்னர் எமது மக்களின் நிலைப்பாடுகளை புரிந்து நாம் யாரை ஆதரிப்பது என்பது குறித்து முடிவெடுப்போம் - என்றார்.

(ஐ)



வரலாற்று பெருமைமிகுந்த நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தின் மூலமூர்த்திக்கு நேற்று முன்தினம் 108 கலசாபிஷேகம் நடைபெற்ற தருணம்...!

## துணவி வாள்வெட்டு இருவர் கைதாகினர்

யாழ்ப்பாணம், ஜூன் 17

வட்டுக்கோட்டை - துணவியில், கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவம் தொடர்பில் இருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர் என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெதுப்பகத்தில் பணிகளை முடித்துவிட்டுத் திரும்பியவர் மீதே இந்த வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.

மோட்டார்சைக்கிளில் வந்த நால்வரே இவ்வாறு வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டிருந்தனர்.

சந்தேக நபர்கள் தலைமறைவாகியிருந்த நிலையில் அவர்களில் இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.



# ஆய்வுநூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 17

அமரர் கலாநிதி கார்த்திகேசு திருப்பதி தனது கலாநிதி பட்டத்துக்காக ஆக்கிய மாணிக்கவாசகரும் பெரியாழ்வாரும் கையாண்ட இலக்கிய உத்திகள் என்ற நூலின் வெளியீட்டு நிகழ்வு கோப்பாய் சரவணபவனந்த வித்தியாலயத்தில் ஐ. சிவலோகநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் ம. இரகுநாதன் கலந்து கொண்டார்.

நூலின் வெளியீட்டுரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசனும் நயப்புரைகளை எழுத்தாளர் கோப்பாய் சிவம் மற்றும் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அதிபர் அ. ஆனந்தராசா ஆகியோரும் ஆற்றினர்.

நூலை நூலாசிரியரின் சகோதரன் கா. ஞானபண்டிதன் வெளியிட்டு வைக்க பேராசிரியர் ம. இரகுநாதன் பெற்றுக் கொண்டார். ஏற்புரையை மக்கள் வங்கி பிரதி முகாமையாளர் தெ. ஹர்சன் ஆற்றினார்.

ஆசிரியர்களான அ. பேரின்பநாயகம் செ. மோகநாதன் ஆகியோர் நிகழ்வுகளை தொகுத்து வழங்கினர்.

(ஐ)

# முதலீடுகளுக்கு சொத்து வழங்கும்போது வெளிப்படையாக அறிவிக்க வேண்டும்!

## வலியுறுத்தி மன்னாரில் ஆர்ப்பாட்டம்

மன்னார், ஜூன் 17

முதலீடுகளுக்காக சொத்துகளை வழங்கும்போது மக்களுக்கு வெளிப்படைத்தன்மையுடன் அது தொடர்பில் அறிவிக்குமாறு வலியுறுத்தி மன்னார் காவையன் குடியிருப்பு மக்கள் நேற்று முன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவின் காவையன் குடியிருப்பில் அடையாளப்படுத்தப்பட்டுள்ள காணி எதற்காக வழங்கப்படவுள்ளது என்பதனை வெளிப்படைத்தன்மையுடன் அறிவிக்க வேண்டும் என்று இதன்போது போராட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.



நேற்று முன்தினம் காணிகளுக்குள் சிலர் அபிவிருத்தி சார்ந்த வேலைத்திட்டத்துக்கு சென்ற சந்தர்ப்பத்தில், பிரதேச மக்கள் தமது எதிர்ப்பை தெரிவித்திருந்தனர்.

கவனவீர்ப்பு நடைபெற்ற இடத்துக்கு சென்றிருந்த பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், அங்கிருந்த பொதுமக்களுடன் கலந்துரையாடினார்.

இது தொடர்பில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரனிடம் வினவிய போது, இந்த விடயம் குறித்து ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

(ஐ)

## தமிழ் பாடசாலைகளுக்கு உதவி ஆசிரியர் ஆட்சேர்ப்பு

கொழும்பு, ஜூன் 17

பெருந்தோட்ட பகுதிகளில் உள்ள தமிழ் பாடசாலைகளுக்கு உதவி ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியுள்ளது.

இதன்படி ஆட்சேர்ப்புக்கான தகைமைகளை பூர்த்தி செய்த ஆசிரியர்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விண்ணப்பப் படிவங்களை இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் www.donets.lk என்ற இணையத்தளத்துக்குள் பிரவேசித்து தரவிறக்கம் செய்து கொள்ள முடியும் என்றும் விண்ணப்பப் படிவங்களை இணைய முறைமை ஊடாக மாத்திரமே சமர்ப்பிக்க முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் எதிர்வரும் ஜூலை மாதம் 12ஆம் திகதி இரவு 9 மணிவரையில் மாத்திரமே விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## தாக்குதல் நடத்திய வன்முறை குழு மீசாலையில் மடக்கிப் பிடிப்பு!

தென்மராட்சி, ஜூன் 17

கரப்பந்தாட்ட இறுதிப் போட்டி நடைபெறவிருந்த மைதானத்துக்குள் நுழைந்த வன்முறை கும்பலை ஊரவர்கள் திரண்டு மடக்கிப் பிடித்தனர்.

மீசாலையில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

மீசாலையில் நடந்த கரப்பந்தாட்ட தொடரின் இறுதிப் போட்டி நேற்று நடைபெறவிருந்தது. இதற்கான ஆயத்தப் பணிகளில் நேற்று முன்தினம் ஈடுபட்டவர்கள் மீது வாள்வெட்டு குழு புகுந்து தாக்குதல் நடத்தியது. இதில் ஒருவர் படுகாயமடைந்தார். அதே பகுதியை சேர்ந்த 25 வயது இளைஞரே காயமடைந்தவராவார்.

இதேநேரம் 12 பேர் கொண்ட குழுவினரே வாள்களுடன் புகுந்து தாக்குதலை நடத்தினர். இவர்களில் நால்வரை ஊர் மக்கள் மடக்கிப்பிடித்தனர். ஏனையவர்கள் தப்பியோடி விட்டனர்.

பிடிபட்டவர்கள் மின்கம்பங்களில் கட்டி வைக்கப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் அறிந்து அங்கு சென்ற பொலிஸார் பிடிபட்டிருந்தவர்களை விடுவித்து கைது செய்தனர். தாக்குதலை நடத்தி விட்டு தப்பிச் சென்றவர்களையும் கைது செய்ய நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

(ஐ)

## ஓட்டோ விபத்தில் 4 பேர் படுகாயம்!

நுவரெலியா, ஜூன் 17

ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியின் கொட்டகலை பகுதியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து முச்சக்கர வண்டி விபத்துக்குள்ளானதில் நால்வர் காயமடைந்துள்ளனர்.

கொட்டகலை மருத்துவமனைக்கு அருகாமையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த முச்சக்கர வண்டியின் சாரதி மற்றும் அதில் பயணித்த நால்வரும் கொட்டக்கலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக கிளங்கன் மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கொட்டகலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# வடக்கில் காடழிப்பை தடுப்பதற்கு கண்காணிப்பு பணியில் ட்ரோன்!

## வனவளத் திணைக்களம் அறிவிப்பு

முல்லைத்தீவு, ஜூன் 17

**வடக்கு மாகாணத்தில் இடம்பெறும் காடழிப்பை கட்டுப் படுத்துவதற்கு ட்ரோன் கமெராகளை பயன்படுத்தும் முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக வனப்பாது காப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.**

முல்லைத்தீவு, மன்னர் மாவட்டங்களில் இது செயல் படுத்தப்படுகின்றனது. இதற்கென வனவளத் திணைக்களத்தின் விசேட பயிற்சி பெற்ற அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து அதிகளவிலான சட்டவிரோதமான தேக்கு, முதிரை, பாலை மரங்கள் வெட்டப்பட்டு வெளிமாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதனால் இயற்கை வளமான காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக முறிப்பு, தண்ணி முறிப்பு, கோடாலிக்கல்லு, கரிப் பட்டமுறிப்பு, உடையார் கட்டு, விசுவமடு, மன்னாகண்டல், முத்துஐயன்கட்டு, நெட்டாங்கண்டல், துணுக்காய், ஐயன்கன்குளம், கொக்காவில், பனிக்கன் குளம், அம்பகாமம், கரிப்பட்ட முறிப்பு, மணவாளன்பட்டமுறிப்பு, மாங்குளம், ஒட்டுசுட்டான் போன்ற பிரதேசங்களில் உள்ள இயற்கை வளமான காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன.

சட்ட விரோத மரக்கடத்தல் தொடர் பில் பல நூற்றுக்கணக்கான சம்பவங்கள் இடம்பெற்றாலும் சில சம்பவங்களையே பொலிஸார் கண்டுள்ளார்கள். பல இடங்களில் பெருமளவான அறுக்கப்பட்ட மரக்குற்றிகள் பொலிஸாரால் மீட்கப்பட்டன. வாகனங்களில் கடத்தப்பட்டமை தொடர்பிலும் பல வழக்குகள் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் காணப்படுகின்றன. இவ்வாறான நிலையில் பெருமளவான இயற்கை வளத்தை அழிப்பவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கோ கட்டுப்படுத்தவோ பொலிஸ், வன வளத் திணைக்களங்களிடம் ஆளணி பற்றாக்குறை நிலவுகிறது.

இதற்கு தீர்வாகவே ட்ரோன் கண்காணிப்பு முறைமை பயன் படுத்தப்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# ரணிலின் பதவிக்காலத்தை நீடிப்பதற்கு ஆதரவு இல்லை

## பொதுஜன பெரமுன தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 17

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பதவி காலத்தை நீடிப்பதற்கான பிரேரணை பாராளுமன்றத்திற்கு வந்தால் சிறீ லங்கா பொதுஜன பெரமுன அதற்கு ஆதரவளிக்காது என தெரிவிக்கப்பட்டுள்ளது

அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் நேற்று வெளியான சிங்க வார இதழுக்கு அளித்த நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கொள்கை ரீதியாக தேர்தலை ஒத்திவைப்பதை சிறீ லங்கா பொதுஜன பெரமுன எதிர்ப்பதாகவும், எனவே பதவி நீடிப்பு தொடர்பான யோசனைக்கு ஆதரவளிக்கப் போவதில்லை.

19ஆவது திருத்த சட்டத்தின் கீழ் 5 வருடங்களாக குறைக்கப்பட்ட ஜனாதிபதியின் பதவி காலத்தை மீண்டும் 6 வருடங்களாக நீடிக்க நடவடிக்கை எடுக்கப்படுவது தொடர்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், 2019ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த கோட்டாபய ராஜபக்ஷ மக்கள் போராட்டத்தால் பதவி விலகியிருந்தார்.

இந்நிலையில், கோட்டாபய ராஜபக்ஷவின் எஞ்சிய காலத்திற்கு மட்டுமே ரணில் விக்கிரமசிங்க, சிறீ லங்கா பொதுஜன பெரமுனவால் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார்" - என்றும் அவர் கூறினார்.

(ஐ)

# மியன்மாரில் பணயக்கைதிகளாக உள்ள இலங்கையர்கள் விரைவில் மீட்கப்படுவர்

## இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய

கொழும்பு, ஜூன் 1

மியன்மாரில் இணைய குற்றச்செயல்கள் இடம்பெறும் பகுதியில் 49 இலங்கையர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தெரிவித்துள்ளார்.

மியன்மாருக்கான பயணத்தை நிறைவுசெய்து திரும்பியபோதே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், மியன்மாரில் இணைய குற்றச் செயல்கள் இடம்பெறும் பகுதியில் பல நாடுகளைச் சேர்ந்த ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் இலங்கையை சேர்ந்த 49 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களை விரைவில் மீட்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளதாகவும் இது தொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன என்றும் அவர் கூறினார்.

இதேவேளை ரஷ்யா - உக்ரைன் மோதலில் பங்கேற்க ரஷ்யா சென்றுள்ள முன்னார் இராணுவத்தினரை நாட்டுக்கு அழைத்து வர எதிர்வரும் 26, 27ஆம் திகதிகளில் விசேட கலந்துரையாடல் நடைபெறவுள்ளது என்றும் கூறினார். (ஐ)

# கைபேசிகளின் விலைகள் குறைக்கப்பட வேண்டும்!

கொழும்பு, ஜூன் 17

கடந்த காலத்தில் அதிகரிக்கப்பட்ட விலைகளுடன் ஒப்பிடுகையில் கைபேசிகளின் விலை குறைப்பு போதியதாக இல்லை என்று அகில இலங்கை தொடர்பாடல் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் அந்த சங்கம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

கைபேசிகளின் விலை 300 முதல் 400 சதவீதம் வரை அதிகரித்தது. ஆனால், 30 முதல் 35 சதவீதம் வரையே குறைந்துள்ளதென அவர் குறிப்பிட்டள்ளார்.

விலை கட்டுப்படியாக இல்லை. மேலும் கைபேசிகளை அத்தியாவசிய பொருட்களாக அறிவிக்க வேண்டும் - என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

# றோயல் பார்க் கொலையாளியை கைது செய்து அழைத்து வாருங்கள்

## சட்ட மா அதிபர் அதிகாரிகளுக்கு கடிதம்

கொழும்பு, ஜூன் 17

றோயல் பார்க் கொலைக் குற்றவாளி ஜூட் ஷமந்த ஜயமஹாவை கைது செய்து நாட்டுக்கு அழைத்து வந்து ஆயுள் தண்டனையை நிறைவேற்றுமாறு சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர், பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பொலிஸ் மா அதிபர், நீதி அமைச்சின் செயலாளர், சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் மற்றும் குடிவரவுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ஆகியோருக்கு அவர் கடிதம் எழுதியுள்ளார்.

ஜயமஹாவுக்கு வழங்கப்பட்ட ஜனாதிபதி மன்னிப்பை உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு இரத்துச் செய்துள்ளது. இந்நிலையில், தீர்ப்பை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஒவ்வொருவருக்கும் குறிப்பிட்ட அறிவுறுத்தல்களையும் சட்டமா அதிபர் வழங்கியுள்ளார்.

மேலும், ஒவ்வொரு நிறுவனத்துக்கும் சட்டமா அதிபர் அனுப்பியுள்ள எழுத்துப்பூர்வ அறிவுறுத்தல்களுடன் நீதிமன்றத்தின் உத்தரவுகளின் சுருக்கமும் இணைக்கப்பட்டுள்ளது.


நீதிமன்ற உத்தரவை அமல்படுத்துவது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை நீதிமன்றத்தில் தெரிவிக்குமாறு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதால், ஒவ்வொரு நிறுவனமும் மேற்கொண்ட நடவடிக்கைகளின் முன்னேற்ற அறிக்கையை சட்டமா அதிபர் கேட்டுள்ளார்.


நீதிமன்றத்தின் உத்தரவுகளை நடைமுறைப்படுத்துவதற்கு, குறிப்பாக ஜயமஹாவை மீண்டும் சிறையில் அடைக்க, அவரது ஆயுள் தண்டனையை அனுபவிக்க, சம்பந்தப்பட்ட மற்ற அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.


தேவைப்பட்டால், இந்த விவகாரம் தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறவும் குறிப்பிட்ட தரப்பினர்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன.

ஜயமஹாவை கண்டுபிடித்து, கைது செய்து, இலங்கைக்கு நாடு கடத்தவும், ஆயுள் தண்டனையை அனுபவிக்க மீண்டும் சிறையில் அடைக்கவும், நீதிமன்றின் உத்தரவுகளை நடைமுறைப்படுத்த, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உதவுமாறு, பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோருக்கு சட்டமா அதிபர் பணித்துள்ளார்.

(ஐ)







பிரசித்திபெற்ற யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணை வீரமாகாளி அம்பாள் ஆலய பெருந்திருவிழாவில் கடந்த வெள்ளிக்கிழமை திருமஞ்சத்தில் அம்பாள் பரிவாரமூர்த்திகள் சகிதம் எழுந்தருளி அருட்பாலித்த போது...! (படங்கள் ஐ. சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13ஆம் திருத்தம் அமுல் எனக்கூறுவது வடக்கு மக்களை ஏமாற்றும் செயல்!

## ஐக்கிய தேசியக் கட்சி சொல்கிறது

கொழும்பு, ஜூன் 17

**13ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தப் போவதாக சில அரசியல்வாதிகள் வடக்கில் கூறுகின்றனர். இது அந்த மக்களை ஏமாற்றும் செயல் - என்று முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.**



கொழும்பில் நேற்று நிகழ்வு ஒன்றின் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சில அரசியல்வாதிகள் வடக்கில் கூறும் கருத்துகளை தெற்கில் கூற அச்சப்படுகின்றனர். அத்துடன், 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தப் போவதாக அவர்கள் கூறுவது அரசியல் இருப்பை தக்கவைப்பதற்கான முயற்சியாகும்.

இது வடக்கு மக்களின் வாக்குகளை இலக்கு வைத்து அவர்களை ஏமாற்றும் செயலாகும். 13ஆவது அரசமைப்பை நடைமுறைப்படுத்துவதாக எவரும் கூறத்தேவையில்லை. ஏனெனில் 13ஆவது திருத்தம் அரசமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது. 13 ஆவது திருத்தத்தில் காணப்படும் குறைநிறைகளை நிவர்த்தி செய்ய வேண்டியதே தற்போதைய தேவையாகும் - என்றார்.

# பைசர் தடுப்பூசிகளால் 140 கோடி ரூபாய் நட்டம்

கொழும்பு, ஜூன் 17

பைசர் தடுப்பூசிகளால் அரசாங்கத்துக்கு 140 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

கோவிட் பெருந்தொற்று காலத்தில் இறக்குமதி செய்யப்பட்ட 75 இலட்சம் தடுப்பூசிகள் காலாவதியானதாலேயே இந்த நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், உரிய முகாமைத்துவம் இன்றி, மிதமிஞ்சிய அளவில் தடுப்பூசிகள் கொள்வனவு செய்யப்பட்டமையால் பொதுமக்களின் பணம் விரயமாக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் மீது மருத்துவ மற்றும் சிவில் உரிமைகள் குறித்த மருத்துவ தொழிற்சங்க கூட்டமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

முன்னாள் சுகாதார இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண பதவி வகித்த காலத்தில் இலவசமாக கிடைக்கப்பெற்ற தடுப்பூசிகளை கவனத்தில் கொள்ளாது பணம் கொடுத்து தடுப்பூசிகள் கொள்வனவு செய்யப்பட்டன. அண்மையில் சுமார் 75 இலட்சம் காலாவதியாகிய பைசர் தடுப்பூசிகள் அழிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கட்டுமான பொருட்களின் விலைகள் குறைந்துள்ளன

## கட்டுமான தொழிலாளர் சங்கம்

கொழும்பு, ஜூன் 17

சிமெந்து, கம்பி உள்ளிட்ட கட்டுமானப் பொருட்களின் விலைகள் வீழ்ச்சியடைந்து வருகிறது. இதனால், கட்டுமான பணிகளை மீண்டும் தொடங்குமாறு தேசிய கட்டுமானத் தொழிலாளர் சங்கம் பொது மக்களிடம் கோரியுள்ளது.

கடந்த காலத்தில் இலங்கை எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியுடன் ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி மற்றும் பல காரணிகளால் கட்டுமானத் துறையின் பொருட்கள் மற்றும் மூலப்பொருட்களின் விலைகள் வேகமாக அதிகரித்திருந்தன.

எவ்வாறாயினும், பொருளாதாரம் மீட்சியடைந்துள்ள நிலையில், தற்போது அவற்றின் விலையில் வீழ்ச்சி காணப்படுவதாக தேசிய கட்டுமான தொழிலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த தேசிய கட்டுமான தொழிலாளர் சங்கத்தின் செயலாளர் சுபுன் அபேசேகர,

"கடந்த காலத்தில் கட்டுமானத் துறை முற்றிலும் சரிந்திருந்தது. இன்று, இத்துறையில் ஓரளவு மீட்சி ஏற்பட்டுள்ளது. சீமெந்து, இரும்பு, பெயின்ற் போன்றவற்றின் விலைகள் ஓரளவுக்கு குறைந்துள்ளன. வங்கி வட்டி வீதமும் குறைந்துள்ளதால் மகிழ்ச்சி அடையலாம். எமது வாடிக்கையாளர்கள் வங்கி கடனை பெற்று வீடு கட்டும் சூழல் ஓரளவுக்கு ஏற்பட்டுள்ளது" என்றார். (ஐ)

# போதைப்பொருள் மூலம் சம்பாதித்த சொத்துகளை கைப்பற்ற புதிய சட்டம்

## விரைவில் வரும் என்கிறார் நீதி அமைச்சர்

கொழும்பு, ஜூன் 17

போதைப்பொருள் கடத்தல் உட்பட சட்டவிரோதமாக சம்பாதித்த பணத்தின் மூலம் வாங்கப்படும் அசையும் மற்றும் அசையா சொத்துகளை நீதிமன்ற உத்தரவின்றி கையகப்படுத்தும் அதிகாரம் கொண்ட சபையை நிறுவுவதற்கான சட்டத்தை விரைவில் இயற்ற அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

இதன்படி, பரந்த அளவிலான குற்றச்செயல்கள் தொடர்பான சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அடுத்த வாரம் அமைச்சரவையின் அனுமதி கோரப்படும் என நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர், சட்டத்துக்கு புறம்பாக சம்பாதித்த பணத்தின் மூலம் சொத்துக்களை கொள்வனவு செய்ததை உறுதிசெய்த பின்னர் நீதிமன்ற நடவடிக்கைகள் இன்றி சொத்துக்களை கையகப்படுத்தும் அதிகாரம் உத்தேச சபைக்கு இருக்கும்.

எவ்வாறாயினும், உத்தேச சபை எடுக்கும் முடிவுகளை சவால் செய்ய சட்ட விதிகள் இருக்கும். முக்கியமாக போதைப்பொருள் கடத்தல் மூலம் சட்டவிரோதமாக சம்பாதித்த பணத்தில் குவிக்கப்பட்டதாக நம்பப்படும் சொத்துகளை கைப்பற்ற பொலிஸார் மேற்கொண்ட அண்மைய முயற்சிகளை அடுத்து இந்த புதிய யோசனை கொண்டுவரப்பட்டுள்ளது.

எவ்வாறியினும், சில வீடுகள், வணிக கட்டடங்கள் மற்றும் வாகனங்கள் நீதிமன்ற உத்தரவை தொடர்ந்து உரிமையாளர்களிடம் மீள ஒப்படைக்கப்பட்டது. இவ்வாறான சொத்துகளை கையகப்படுத்துவதற்கான பொறிமுறை எதுவும் இல்லை.

எனவே, குறைபாடுகளை போக்குவதற்கு புதிய சட்டங்கள் உதவியாக இருக்கும் என்பதால் சில மாதங்களுக்குள் புதிய சட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

நீதிமன்ற உத்தரவுகளின் கீழ் கையகப்படுத்தப்பட்ட சொத்துக்களை நிர்வகிப்பதும் குறித்த சபையின் பொறுப்பாகும் என்றும், சொத்துகளை அரச நோக்கங்களுக்காகப் பயன்படுத்தலாமா அல்லது ஏலத்தில் விற்பனை செய்யப்படுமா என்பதையும் சபை முடிவு செய்யும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (ஐ)

# எரிபொருட்களின் விலைகளை குறைப்பது மிகவும் கடினமானது

## மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு

கொழும்பு, ஜூன் 17

உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை குறைவடைந்துள்ள போதிலும், நாட்டில் எரிபொருட்களின் விலைகளை உடனடியாக குறைப்பது கடினமென மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட கொள்வனவு நடவடிக்கைகளின் பிரகாரம், இலங்கையில் எரிபொருள் விலை குறைப்பு முறையாக மேற்கொள்ளப்பட வேண்டுமென அதன் செயலாளர் சுலக்ஷன ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூர் வர்த்தக குறியீட்டின்படி சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படுகிறது. இதன்படி,



அங்கு தீர்மானிக்கப்படும் விலைகளுக்கு அமைய இலங்கையில் எரிபொருள் விநியோகிக்கப்பட வேண்டும்.

நாட்டின் மொத்தத் தேவையில் சுமார் 35 வீதமான மசகு எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டு சுத்திகரிக்கப்படுவதால், உலக சந்தை விலைகளுக்கு அமைவாக சுத்திகரிக்கப்பட்ட எரிபொருளின் விலைகளில் திருத்தம் மேற்கொள்ள முடியாதெனவும் சுலக்ஷன ஜயவர்த்தன கூறினார்.

எவ்வாறாயினும், கடந்த செப்ரெம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் மசகு எண்ணெய் விலை 27 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளியல் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்துள்ளார்.

கடந்த செப்ரெம்பரில் ப்ரெண்ட் சந்தையில் ஒரு பீப்பாய் மசகு எண்ணெய் விலை 94 அமெரிக்க டொலராக காணப்பட்டது. தற்போது 74 டொலராக குறைவடைந்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# அருங்காட்சியக தீ பாதுகாப்பு அமைப்பு நிறுவியதில் 9 கோடி ரூபாய் நட்டம்!

கொழும்பு, ஜூன் 17

கொழும்பு தேசிய அருங்காட்சியக நூலகத்தில் தீ பாதுகாப்பு அமைப்பை நிறுவியதில் சுமார் 9 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

தேசிய நூதனசாலை திணைக்களம் வெளியிட்டுள்ள 2023ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

தகுதியற்ற ஒப்பந்தக்காரருக்கு தீ பாதுகாப்பு அமைப்பு நிறுவதற்கு வழங்கியமையால் இந்த இழப்பு ஏற்பட்டுள்ளது. ஒப்பந்தக்காரரின் மோசமான செயல்பாட்டால், ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டு, வேறூர் ஒப்பந்ததாரருக்கு மாற்றப்பட்டுள்ளது.


2021 ஜனவரி முதலாம் திகதி, முதல் ஒப்பந்ததாரர் வழங்கிய ஆரம்ப மதிப்பீடு 10 கோடி ரூபாயாக காணப்பட்ட நிலையில், கணக்காய்வு அறிக்கையின்படி, ஒப்பந்தம் முடிவடையும் போது ஏற்கனவே 4 கோடி ரூபாய் செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர், 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ஆம் திகதியன்று, முழுமையடையாத திட்டம் 18 கோடி ரூபாய்க்கு மேலான மதிப்பீட்டின் கீழ் இரண்டாவது ஒப்பந்ததாரருக்கு மாற்றப்பட்டுள்ளது.

எனவே, இரண்டு ஒப்பந்ததாரர்களை உள்ளடக்கிய கொழும்பு தேசிய அருங்காட்சியக நூலகத்தில் தீ பாதுகாப்பு அமைப்பை நிறுவியதன் மூலம் சுமார் 9 கோடி ரூபாய் மேலதிக செலவு ஏற்பட்டுள்ளதாக கணக்காய்வு அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மூதூரில் மலை உடைப்பு தடுத்து நிறுத்தப்படுமா?

## கிராம மக்களின் எதிர்ப்பையடுத்து நீதிபதி நேரில் சென்று பார்வையிட்டார்

மூதூர், ஜூன் 17

**மக்களின் எதிர்ப்பையடுத்து மூதூர் - சேனையூர் கிராமத்தில் மலை உடைக்கப்படும் இடத்தை நீதிபதி நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.**

திருகோணமலை - மூதூர் கிழக்கு சேனையூர் கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட நெல்லிக்குள மலை பிரதேசத்தில் மலையை உடைப்பதால் தமக்குப் பாதிப்புள்ளதாக கல் மலை உடைக்கும் போது எதிர்ப்பு தெரிவித்த 10 பேர் கடந்த 11 ஆம் திகதி சம்பூர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு 12 ஆம் திகதி மூதூர் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் அவர்கள் அனைவரும் சொந்தப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இது தொடர்பான வழக்கை மூதூர் நீதிமன்றில் சம்பூர் பொலிஸார் தாக்கல் செய்ததுடன் சம்பவ இடத்துக்கு நேரில் சென்று ஆராய்வதாக நீதிபதி தெரிவித்திருந்தார். அந்த வகையில் நேற்று முன்தினம் அந்த இடத்துக்கு வந்த மூதூர் நீதிமன்ற நீதிபதி தஸ்னீம் பௌசான் அங்கு முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளை பார்வையிட்டுச் சென்றார்.

குறித்த மலை உடைப்பு காரணமாக அருகிலுள்ள விவசாய செய்கைகளுக்கும் போக்குவரத்து, கால்நடை வளர்ப்பு போன்றவற்றுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அந்த கிராம மக்கள் தெரிவித்தனர்.

இங்கு வருகை தந்த சிரேஷ்ட சட்டத்தரணி த. ஜயசிங்கம் கருத்துத் தெரிவிக்கையில்,

சேனையூர் நெல்லிக்குள மலையைச் சுற்றி காணிகள் இருக்கின்றன. இங்கு கல் உடைப்பதற்கு எந்த வகையில் அனுமதி வழங்கப்பட்டது என்று எமக்குத் தெரியாது.

நீதிமன்றத்தில் இந்த விடயம் இருப்பதால் எமக்கு கருத்து சொல்ல முடியாதுள்ளது. இதனால் இக்கிராம மக்கள் கஷ்டப்படுகிறார்கள் துன்பப்படுகிறார்கள் என்று மாத்திரம் எமக்கு தெரிகின்றது- என்றார்.

இந்த இடத்தை நீதிபதி வந்து பார்வையிட்டு சென்றதால் 20 ஆம் திகதி எமக்கு நல்ல தீர்ப்பு கிடைக்கும் என்று நாம் நம்புகிறோம் என்றும் குறிப்பிட்டார். (எ)

# பாதயாத்திரை குழுவினர் அம்பாறைக்குள் பிரவேசம்

மண்டூர், ஜூன் 17

யாழ்ப்பாணம் தொண்டைமானாறு செல்வச் சந்நிதி - கதிர்காமம் பாதயாத்திரை குழுவினர் 35 ஆவது நாளில் இயந்திரப் படகுப் பாதையில் பயணித்து களுவாஞ்சிக்குடி ஊடாக அம்பாறை மாவட்டத்தை அடைந்துள்ளனர்.


மண்டூர் - குறுமண்வெளி இயந்திரப் படகுப் பாதையில் பாதயாத்திரை குழுவினர் பயணித்தனர்.

சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து கடந்த மாதம் 11 திகதி புறப்பட்ட கதிர்காமம் பாதயாத்திரை குழுவினர் 35 நாட்களாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய ஐந்து மாவட்டங்களைக் கடந்து சனிக்கிழமை ஆறாவது மாவட்டமான அம்பாறை மாவட்டத்துக்குள் பிரவேசித்தனர்.

கடந்த புதன்கிழமை இரவு மண்டூர் கந்தசுவாமி ஆலயத்தில் தரித்து நின்ற பாதயாத்திரை குழுவினர் காலை மண்டூர் - குறுமண்வெளி ஆற்றை பாதையால் கடந்துவந்து களுவாஞ்சிக்குடியை அடைந்தனர்.

கல்லாறு கடலாச்சி அம்மன் ஆலயத்தை தரிசித்து இரவு பெரிய நீலாவணை நாககன்னி ஆலயத்தில் நின்றனர். பின்னர் கல்முனை ஊடாக காரைதீவு சிறீ கண்ணகை அம்மன் ஆலயத்தை வந்தடைந்தனர்.

எதிர்வரும் 29 ஆம் திகதி உகந்த மலையை அடையவுள்ள இந்த பாதயாத்திரை குழுவினர் 30 ஆம் திகதி காட்டுப்பாதை திறக்கப்பட்டதும் காட்டுக்குள் பிரவேசிக்கவுள்ளனர். (எ)











சம்மாந்துறை கோரக்கர் அருள்மிகு சிறீ அகோர மாரியம்மன் ஆலய வருடாந்த தீ மிதிப்பு சடங்கு பகல் இரவு பூஜைகளுடன் களைகட்டியது.

# மட்டு. நகரில் சர்வதேச யோகா தினம்





மட்டக்களப்பு, ஜூன் 17

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு வாழும்கலை அமைப்பு நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை மட்டக்களப்பு காந்தி பூங்காவில் யோகா பயிற்சி வழங்கியது.

இந்தியாவிலிருந்து வருகை தந்த யோகா பயிற்றுவிப்பாளர் சாத்வி இப் பயிற்சியை வழங்கினார். 13 வயதுக்கு மேற்பட்ட பலர் இந்தப் பயிற்சியில் பங்கேற்றனர். (எ)

# இளம் மருத்துவர் நீரில் மூழ்கி பலி

## காரைதீவில் தொடரும் சோகம்

காரைதீவு, ஜூன் 17

காரைதீவைச் சேர்ந்த இளம் மருத்துவர் ஒருவர் கடலில் தவறி வீழ்ந்து உயிரிழந்தார்.

அம்பாறை - காரைதீவைச் சேர்ந்த இ. தக்சிதன் (வயது-34) என்ற மருத்துவரே இவ்வாறு மரணமடைந்தார்.

கல்முனை ஆதார மருத்துவமனையில் பணியாற்றிய மருத்துவர் இ. தக்சிதன் உகந்த மலை முருகன் ஆலயத்துக்குச் சென்று



வரும் வழியில் பாணமைக்கடலில் தவறி வீழ்ந்து உயிரிழந்தார்.

மருத்துவத் துறைக்குத் தெரிவான அம்பாறை காரைதீவைச் சேர்ந்த சிவகரன் அக்சயன் (வயது- 20) என்ற மாணவன் கடந்த வெள்ளிக்கிழமை காலை நீரில் மூழ்கிப் பரிதாபமாக உயிரிழந்தார். இந்தத் துயரத்திலிருந்து காரைதீவு மக்கள் மீள்வதற்குள் மருத்துவர் தக்சிதனின் மரணம் நிகழ்ந்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் படையினர்மீது ஹமாஸ் கடும் தாக்குதல்

## 10 பேர் பலி! பலர் படுகாயம்



காசா முனை, ஜூன் 17

**காஸாவில் ஹமாஸ் போராளிகள் நடத்திய தாக்குதலில் இஸ்ரேல் படையினர் 10 பேர் பலியாகினர். பலர் படுகாயமடைந்தனர் என்று ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.**


பலஸ்தீனத்தின் காஸா முனையை நிர்வகித்துவரும் ஹமாஸ் போராளிகள் கடந்த ஆண்டு அக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேலுக்குள் நுழைந்து பயங்கரவாதத் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர்.

மேலும், இஸ்ரேலிலிருந்து 240 பேரை பணயக் கைதிகளாக காஸா முனைக்கு ஹமாஸ் போராளிகள் கடத்திச் சென்றனர். இதனையடுத்து ஹமாஸ் ஆயுதக் குழுவினர் மீது போர் அறிவித்த இஸ்ரேல் ஒப்பந்த அடிப்படையில் பணயக் கைதிகள் 100 இற்கும் மேற்பட்டோரை மீட்டது. மேலும், 120 பேர் இன்னும் பணயக் கைதிகளாக உள்ளதாகவும், அதில் சிலர் உயிரிழந்திருக்கலாம் எனவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இதனிடையே, பணயக் கைதிகளை மீட்கவும், ஹமாஸ் குழுவினரை ஒழிக்கும் நடவடிக்கையிலும் காஸா முனை மீது இஸ்ரேல் போர் தொடுத்துள்ளது. இந்தப் போரில் காஸாவில் ஹமாஸ் குழுவினர் உட்பட 36 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். அதேபோன்று மேற்குகரையில் ஏற்பட்ட மோதலில் 500 இற்கும் மேற்பட்டோர் பலியாகினர்.

இந்த நிலையில், காஸா முனையில் ஹமாஸ் போராளி குழுவினர் இஸ்ரேல் பாதுகாப்புப் படையினர் இடையே மோதல் நீடித்து வருகிறது.

மத்திய காஸாவில் உள்ள ரபா நகரின் டீர் எல்-பலிகா பகுதியில் இஸ்ரேலிய பாதுகாப்புப் படையினர் சென்றுகொண்டிருந்த இராணுவ வாகனத்தை குறிவைத்து ஹமாஸ் போராளிகள் நேற்று அதிகாலை தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் இஸ்ரேல் பாதுகாப்புப் படையினர் 10 பேர் பலியாகினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)



## போர்க் கப்பல்களில் பயன்படுத்துவதற்கு ரபேல் விமானங்களை வாங்கும் இந்தியா

புதுடில்லி, ஜூன் 17

இந்தியக் கடற்படையின் விமானம் தாங்கிப் போர்க்கப்பல்களில் பயன்படுத்துவதற்காக 26 ரபேல் போர் விமானங்களை வாங்குவது குறித்து இந்தியா - பிரான்ஸ் அதிகாரிகள் புதுடில்லியில் பேச்சுகளை நடத்தி வருகின்றனர்.

இந்திய விமானப் படைக்கு பிரான்ஸிடமிருந்து ஏற்கனவே ரபேல் போர் விமானங்கள் வாங்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் கடற்படையிலுள்ள ஐ. என். எஸ். விக்கிரமாதித்தியா, விக்கிராந்த் விமானம் தாங்கிப் போர்க்கப்பல்களில் பயன்படுத்தப்படும் மிக் 29 ரக போர் விமானங்களுக்குப் பதிலாக ரபேல் போர் விமானங்களைப் பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. (எ)

## டெங்கு நோயால் 197 பேர் மரணம்

மணிலா, ஜூன் 17

பிலிப்பைன்ஸில் டெங்கு நோய்த் தாக்கத்தால் 197 பேர் உயிரிழந்தனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டில் டெங்கு காய்ச்சல் வேகமாகப் பரவி வருகிறது. மழைக்காலத்தின் ஆரம்பத்தில் வானிலையில் ஏற்படும் மாறுபாடுகள், வெள்ளப்பெருக்கு மற்றும் அசுத்தமான நீர்த் தேக்கம் போன்ற காரணங்களால் டெங்கு உள்ளிட்ட நீரால் பரவும் தொற்று நோய்கள் வேகமாகப் பரவி வருகின்றன.

இந்த நிலையில் பிலிப்பைன்ஸில் கடந்த ஜனவரி மாதம் முதல் இதுவரையிலான கால கட்டத்தில் சுமார் 70 ஆயிரத்து 500 பேருக்கு டெங்கு காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், இதில் 197 பேர் உயிரிழந்ததாகவும் அந்த நாட்டின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (எ)

## 6 மாதங்களின் பின் பொதுவெளியில் பிரிட்டன் இளவரசி கேத் மிடில்டன்



லண்டன், ஜூன் 17

புற்றுநோய் பாதிப்புக்குள்ளான பிரிட்டன் இளவரசி கேத் மிடில்டன், 6 மாதங்களுக்குப் பிறகு பொதுவெளியில் தோன்றினார்.

பிரிட்டன் இளவரசி கேத் மிடில்டன், தனக்கு புற்றுநோய் பாதிப்பு கண்டறியப்பட்டிருப்பதாக ஆறு மாதங்களுக்கு முன்னர் தெரிவித்தார்.

42 வயதான அவர், பிரிட்டன் இளவரசர் வில்லியம்ஸின் மனைவி ஆவார். ஜனவரி மாதம் மருத்துவமனையில் இரண்டு வார காலம் அவர் சிகிச்சையில் இருந்தார். தனக்கு புற்றுநோய் பாதிப்பு ஏற்பட்டுள்ளதை வீடியோ மூலம் அவர் உறுதி செய்திருந்தார்.

இந்தச் சூழலில் சனிக்கிழமை காலை லண்டன் நகரின் சாரல் மழைக்கு மத்தியில் குதிரைகள் பூட்டிய சாரட் வண்டியில் தனது மூன்று பிள்ளைகளுடன் கேத் மிடில்டன் பயணித்தார். மன்னர் மூன்றாம் சார்லஸின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு பக்கிங்ஹாம் அரண்மனையில் இருந்து புறப்பட்ட பவனியில் அவர் கலந்து கொண்டார். இதில் அவரது கணவரும் பங்கேற்றார். பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக், தனது குடும்பத்துடன் இந்த நிகழ்வில் பங்கேற்றார். (எ)

# இத்தாலி பாராளுமன்றத்தில் அமைச்சரை தாக்க முயற்சி

## ஆளும் - எதிர்க்கட்சி எம். பிகள் இடையே கைகலப்பு

ரோம், ஜூன் 17

இத்தாலி பாராளுமன்றத்தில் அமைச்சர் மீது எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தாக்குதல் நடத்த முயன்றார். இதனால் ஏற்பட்ட கைகலப்பில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் படுகாயமடைந்தார்.

ஐரோப்பிய நாடான இத்தாலியில் பிரதமர் ஜார்ஜியா மெலானி தலைமையிலான ஆட்சி நடைபெற்று வருகிறது. அங்கு மாகாணங்களுக்கு சுயாட்சி வழங்குவது குறித்த சட்ட வரைவு பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டது.

இந்த சட்ட வரைவை ஆதரித்து பிராந்திய விவகாரங்கள் துறை அமைச்சர் ராபர்டோ கால்டெரசி உரையாற்றினார். அப்போது நாட்டில் பிரிவினையை ஏற்படுத்தும் எனக் கூறி இந்த சட்டத்துக்கு எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பு வெளியிட்டனர்.



மேலும், இந்த சட்டத்தை கைவிட வேண்டும் எனக் கோரி அவர்கள் கூச்சலிட்டனர். இந்த நிலையில் எதிர்க்கட்சி எம். பியான லியானார்டோ டோனோ தேசியக் கொடியால் ராபர்டோ கால்டெரசியின் கழுத்தை இறுக்கி தாக்குதல் நடத்த முயன்றார். இதனைப் பார்த்த ஆளுங் கட்சி எம்.பிகள் லியானார்டோவை பிடித்து இழுத்தனர். அப்போது இரு தரப்பினர் இடையே கைகலப்பு ஏற்பட்டது. எனவே ஒருவரையொருவர் தாக்கிக்கொண்டனர்.

இதில் எதிர்க்கட்சி எம்.பி. ஒருவர் படுகாயமடைந்தார். அவரை அங்கிருந்த பாதுகாவலர்கள் மீட்டு உடனடியாக மருத்துவமனையில் சேர்த்தனர்.

இத்தாலியில் உலக நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றுள்ள ஜி 7 மாநாடு நடைபெற்று வருகிறது. இந்த சூழ்நிலையில் பாராளுமன்றத்தில் எம்.பிகள் இடையே ஏற்பட்ட மோதல் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (எ)

# உக்ரைன்மீது ரஷ்யா போரை தொடர்வதற்கு உதவும் சீனா

## ஜி 7 நாடுகளின் தலைவர்கள் குற்றச்சாட்டு

ரோம், ஜூன் 17

ரஷ்யா - உக்ரைன் இடையிலான யுத்தத்தை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு சீனா உதவுகின்றது என்று ஜி 7 நாடுகளின் தலைவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இத்தாலியில் நடைபெற்று வரும் மாநாட்டிலேயே கடுமையான தொனியில் ஜி 7 நாடுகளின் தலைவர்கள் இவ்வாறு குற்றச்சாட்டுக்களை அடுக்கியுள்ளனர்.

இதேவேளை, ரஷ்யாவின் போர் நடவடிக்கைகளுக்கு பொருள் உதவிகளை வழங்குபவர்களுக்கு எதிராக தடைகள் விதிக்கப்படும் என ஜி 7 நாடுகளின் தலைவர்கள் எச்சரித்துள்ளனர்.

ரஷ்யாவின் இராணுவத் தொழில்துறை வளாகத்துக்கு உதவுவது தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் கடும் நடவடிக்கைகளை எடுக்கச் செய்வதற்கான முயற்சிகளில் அமெரிக்கா ஈடுபட்டுள்ள நிலையிலேயே ஜி 7 நாடுகளின் தலைவர்களின் இந்த கடும் எச்சரிக்கை வெளியாகியுள்ளது. (எ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில் - சஜித் இணைப்பு முழுமையாக முறிந்தது!

## முயற்சியில் ஈடுபட்ட கட்சி தலைவர்

கொழும்பு, ஜூன் 17

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும், சஜித் பிரேமதாஸவையும் இணைப்பதற்கு முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் முழுமையாக முறிவடைந்துள்ளன என்று இந்த இணைப்பு முயற்சியில் ஈடுபட்டன சிறுபான்மையின கட்சியின் தலைவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.**





இணைப்பு முயற்சி தொடர்பான பேச்சில் சஜித் பிரேமதாஸ தரப்பில் பங்கேற்றிருந்த அவர் தன்னை முழுமையாக அடையாளப்படுத்துவதற்கு விரும்பாத நிலையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவையும் இணைத்து ஒரே அணியாக்குவதற்காக இரு தரப்பிலும் உள்ள முக்கிய உறுப்பினர்களைக் கொண்ட குழுவினருக்கு இடையில் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டன.

அதேபோன்று குறித்த பேச்சின்போது இரு தரப்பிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய விட்டுக்கொடுப்புக்கள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் சம்பந்தமாக உரையாடப்பட்டது. எனினும், இரு தரப்பினர் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைமைகள் விட்டுக்கொடுப்புகளுக்கு தயாரில்லாத நிலையில் தொடர்ந்தும் பேச்சுகளை முன்னெடுப்பதில் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது. இதனால், தொடர்ச்சியாக இணக்கப்பாட்டை எட்டுவதற்கான முயற்சிகளை முன்னெடுத்தபோதும் தலைவர்களின் விட்டுக்கொடுப்பற்ற நிலைமை நீடித்தமையால் தொடர்ந்து அந்த விடயத்தை முன்னெடுக்க முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. இதனால் மீண்டும் அவ்விதமான பேச்சுக்களை முன்னெடுப்பதில் சிக்கலான நிலைமைகளே ஏற்பட்டுள்ளது. ஆகவே, அந்தப் பேச்சுகளை தொடர்ந்தும் முன்னெடுப்பதால் பயனில்லை. எனவே, அந்த முயற்சி தற்போது கைவிடப்பட்டுள்ளது" என்றார்.

இதேவேளை, யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த சஜித் பிரேமதாசவிடத்தில், ஜனாதிபதி ரணிலுடன் மீண்டும் இணைவு பற்றி கேள்வி எழுப்பப்பட்டது. அப்போது அவர் "ரணில் விக்கிரமசிங்க ராஜபக்ஷக்களின் பாதுகாவலனாக உள்ளார். அத்துடன் அவர் புதிய லிபரல் வாதத்தைப் பின்பற்றுகிறார். அது தனவந்தர்களை போசிப்பதாகும். ஆகவே, அரசியல் ரீதியாகவும், கொள்கை ரீதியாகவும் முரண்பட்டுள்ளவருடன் எப்படி 'டீல்' போட முடியும் என்று கேள்வி எழுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# மலையகத்துக்கான ரயில் சேவை பாதிப்பு

கொழும்பு, ஜூன் 17

மலையகத்துக்கான ரயில் சேவைகள் நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று வரை பாதிக்கப்பட்டிருந்தது.

இதனிடையே, கொழும்பு - திருகோணமலை ரயில் சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

கனேமுல்ல மற்றும் புலுகஹா கொட புகையிரத நிலையங்களுக்கு இடையில் ரயில் தடம் புரண்டதால் இந்த ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டன.

இதேவேளை, தலவாக்கலை மற்றும் வட்டகொட ரயில் நிலையங்களுக்கு இடையில் ரயில் ஒன்று தடம் புரண்டமையினால் மலையக பாதையில் பயணிக்கும் ரயில் சேவை தடைப்பட்டது.

கொழும்பு கோட்டையில் இருந்து நானுஓயா நோக்கி பயணித்த ரயில் ஒன்று நேற்று முன்தினம் இரவு புரண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு கோட்டையில் இருந்து பதுளை வரை செல்லும் ரயில்கள் ஹற்றன் ரயில் நிலையம் வரையும், பதுளையில் இருந்து கோட்டை வரை செல்லும் ரயில்கள் நானுஓயா ரயில் நிலையம் வரையும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

இரண்டு நிலையங்களுக்கும் இடையில் பயணிகளை மாற்றுவதற்கு பேருந்துகள் பயன்படுத்தப்படும் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)

# ரயிலில் சென்ற வெளிநாட்டு பெண் சுரங்க பாதையில் மோதி படுகாயம்

கொழும்பு, ஜூன் 17

கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை நோக்கி சென்ற உடரட்ட மெனிகே ரயிலில் பயணித்த வெளிநாட்டு யுவதி ஒருவர் ரயில் பாதையில் உள்ள சுரங்கத்தில் மோதி விபத்துக்குள்ளாகி படுகாயமடைந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் 23 வயதுடைய பிலோஸ் அனஸ்தாசியா என்ற உக்ரைன் யுவதியே காயமடைந்தார்.


இலங்கைக்கு குடும்பத்துடன் சுற்றுலா வந்திருந்த இவர் குடும்பத்தாருடன் எல்ல பகுதிக்கு ரயிலில் பயணித்துக் கொண்டிருந்தபோது, ஒஹியா மற்றும் பட்டிபொல ரயில் நிலையங்களுக்கு இடையில் அமைந்துள்ள சுரங்க பாதையில் மோதுண்டு காயமடைந்தார்.

தியத்தலாவை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைக்காக பதுளை போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

(ஐ)

# சிங்கள - தமிழ் - முஸ்லிம் கட்சிகளை இணைத்து தேசிய அரசை அமையுங்கள்

## ராகுல தேரர் கோரிக்கை



கொழும்பு, ஜூன் 17

அரசியல் அதிகாரத்தை ஒவ்வொரு தனிநபரின் கையில் எடுக்க முயற்சிக்காது, தனித்து செல்லாமல், சிங்கள, தமிழ், முஸ்லிம் கட்சிகளை ஒன்றிணைத்து தேசிய அரசாங்கத்தை அமைக்குமாறும் - என தேசிய நாமல் பூங்காவின் ஸ்தாபகர் வனவாசி ராகுல தேரர் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் யார் ஆட்சிக்கு வந்தாலும் எந்தவொரு தலைவராலும் தனித்து சாதிக்க முடியாது. அதனை மீளக் கட்டியெழுப்புவதற்கான திறன் தற்போதுள்ள தலைவர்களுக்கு இல்லை எனவும் அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது கூறியுள்ளார்.

மேலும், தற்போது ஒரு தேர்தல் நெருங்கியுள்ளது. அரசியல்வாதிகள் ஒவ்வொருவரும் கூட்டணி அமைத்து கட்சி மாறிவிடுகிறார்கள். இந்த அரசியல்வாதிகள் இன்னும் கிராமங்களுக்குச் செல்லவில்லை என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

தேர்தல் காரணமாக, அரசியல்வாதிகள் கிராமங்களுக்குச் செல்லத் தயாராகி வருகின்றனர். நாட்டிலுள்ள அனைத்து அரசியல்வாதிகளும், அவர்களது கட்சி அல்லது கூட்டணியைப் பிரபலப்படுத்தாமல், தேசம் இப்போது திவாலானது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

அனைத்து அரசியல்வாதிகளும் இதற்கு பொறுப்பேற்க வேண்டும். மூத்த அரசாங்க அதிகாரிகளும் பொறுப்பேற்க வேண்டும். அரசியல்வாதிகளை நாம் அடிக்கடி குற்றம் சுமத்தும் போது, நாட்டின் திவாலிநிலைக்கு வழிவகுத்த செயன்முறைகளுக்கு அனுமதியளித்த அதிகாரிகள் குறித்து விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும்.

கட்சி நலன்களையும் தனிப்பட்ட ஆதாயங்களையும் புறந்தள்ளிவிட்டு நீங்கள் அனைவரும் ஒன்றிணைந்து தேசிய அரசாங்கத்தின் மூலம் இந்த நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும் - என்றார்.

(ஐ)

# பிரச்னைகளுக்கு உடன் தீர்வில்லையேல் பேச்சு இன்றி தொழிற்சங்க நடவடிக்கை!

கொழும்பு, ஜூன் 17

சேவைத்துறையில் நிலவும் அடிப்படை பிரச்னைகளுக்கு அரச சேவை ஆணைக்குழு நாளை செவ்வாய்க்கிழமை சாதகமான தீர்வை வழங்காவிடின் எவ்வித பேச்சிலும் ஈடுபடாமல் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவோம் என புகையிரத நிலைய அதிபர் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன தெரிவித்தார்.

பதவி உயர்வு, ஆட்சேர்ப்பு ஆகியவற்றில் நிலவும் பிரச்னைகளுக்கு தீர்வு கோரி புகையிரத அதிபர் சங்கத்தினர் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதாக கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்திருந்தனர்.

பகல் 2 மணிக்கு முன்னர் சாதகமான பதில் கிடைக்க வேண்டும் என்றும் புகையிரத சாரதிகள் சங்கத்தின் போக்குவரத்து அமைச்சுக்கு கால அவகாசம் வழங்கியிருந்தனர்.

புகையிரத நிலைய அதிபர் சங்கத்தினர் முன்வைத்துள்ள கோரிக்கை தொடர்பில் புகையிரத திணைக்களத்தின் நிறைவேற்று சபை வெள்ளிக்கிழமை பேச்சில் ஈடுபட்டது.

நிறைவேற்று சபையில் உறுதியான தீர்வு எட்டப்படாத நிலையில் பதில் புகையிரத பொது முகாமையாளர் உட்பட புகையிரத நிலைய அதிபர் சங்கத்தினர் பதில் போக்குவரத்து அமைச்சர் லசந்த அழகியவண்ண உட்பட போக்குவரத்து அமைச்சின் செயலாளர் ஆகியோருடன் பேச்சில் ஈடுபட்டனர்.

போக்குவரத்து பதில் அமைச்சருடன் நடந்த பேச்சைத் தொடர்ந்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடும் தீர்மானத்தை கைவிட்டனர். இந்த சந்திப்பு தொடர்பில் பதில் போக்குவரத்து அமைச்சர் லசந்த அழகியவண்ண குறிப்பிட்டதாவது,

புகையிரத நிலைய அதிபர் சேவையில் நிலவும் பிரச்னைகளுக்கு தீர்வு காணும் வகையில் அமைச்சரவை பத்திரம் கடந்த மாதம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இவ்விடயம் குறித்து அரச சேவை ஆணைக்குழுவின் ஆலோசனை கோரப்பட்டுள்ளது.

பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்காக வகுக்கப்பட்ட செயற்திட்டத்தில் ஒருசில தொழில்நுட்ப கோளாறுகள் காணப்படுவதால் இறுதி தீர்மானம் எடுப்பது தாமதமாகியுள்ளது என அரச சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளது. அரச சேவை ஆணைக்குழு நாளை செவ்வாய்க்கிழமை உறுதியான தீர்மானத்தை அறிவிப்பதாக குறிப்பிட்டுள்ளது என்றார்.

இந்த நிலையில், புகையிரத நிலைய அதிபர் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன குறிப்பிடுகையில்,

முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளுக்கு அரச சேவைகள் ஆணைக்குழுவுடன் கலந்துரையாடி செவ்வாய்க்கிழமை உறுதியான மற்றும் சாதகமான தீர்மானத்தை அறிவிப்பதாக பதில் போக்குவரத்து அமைச்சர் உறுதியளித்துள்ளார். சாதகமான தீர்வின்றேல் எவ்வித பேச்சிலும் ஈடுபடாமல் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவோம் - என்றார்.(ஐ)

# மின்சார வாகன இறக்குமதி அரசாங்கம் விசேட கவனம்!

கொழும்பு, ஜூன் 17

மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

வாகன இறக்குமதி நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பான எதிர்கால வேலைத்திட்டத்தை தயாரிப்பதற்கான விசேட குழு நியமிக்கப்பட்டமை தொடர்பில் ஊடகங்களுக்கு அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் தேசிய...

மற்றும் நோயால் பாதிக்கப்பட்டிருந்த இவர் முல்லைத்தீவு பொது மருத்துவமனையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

1982இல் விடுதலை புலிகள் சாவகச்சேரி பொலிஸ் நிலையம் மீது நடத்திய தாக்குதலின்போது காயமடைந்த தளபதிகளான சீலன், குண்டப்பா, புலேந்திரன் போன்றவர்களுக்கு சிகிச்சை அளித்தார் என்ற குற்றச்சாட்டில் கைதானவர் மருத்துவர் ஜெயகுலராஜா. 1983ஆம் ஆண்டு வெலிக்கடை சிறையில் குட்டிமணி, தங்கதுரை போன்றவர்களுடன் அடைத்து வைக்கப்பட்ட இவர் பின்னர் மட்டக்களப்பு சிறைக்கு மாற்றப்பட்டார்.

போராளிகள் மட்டக்களப்பு சிறையை உடைத்தபோது அங்கிருந்து தப்பிய அவர் இந்தியாவுக்கு சென்றார். விடுதலைப் புலிகள் தமிழர் புனர்வாழ்வு கழகத்தை (ரி. ஆர். ஓ) நிறுவியபோது அந்த அமைப்பின் முதலாவது தலைமை பொறுப்பாளராக கடமையாற்றினார்.

தமிழீழ விடுதலை புலிகள் மருத்துவ பிரிவை ஆரம்பித்தபோது ஆரம்பத்தில் பயிற்சிகளை அளித்திருந்தார். முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சுகாதார சேவைகள் பணிப்பாளராகவும் இவர் கடமையாற்றினார். இறுதிப் போர் காலத்திலும் இவர் மகத்தான பணியை ஆற்றியிருந்தார்.

முள்ளியவளை - கணுக்கேணியில் வசித்த வந்த அன்னாரின் இறுதிக்கிரியை இன்று திங்கட்கிழமை புனித மத்தியா ஆலய சேமக்காலையில் நடைபெறவுள்ளது. (ஐ)

## வடக்கின்...

மன்னாரில் சுற்றுலா, மீன்பிடி தொழில் மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுசக்தியை பெற்றுகொள்வதற்கான வாய்ப்புகளும் அதிகம் உள்ளன.

இதேபோல் மன்னாரில் காற்றாலை மற்றும் சூரிய ஒளி மின் உற்பத்திக்கான சாத்தியக்கூறுகள் மிக அதிகமாகவே உள்ளன. தேவைக்கு மிகுதியான வலு சக்தியை இந்தியாவுக்கு விற்பனை செய்வது குறித்து அந்நாட்டு அரசாங்கத்துடன் பேச்சு நடத்தப்படுகிறது.

வடக்கு மாகாணமானது பசுமை சக்தியை பெருமளவில் கொண்டுள்ளது. குளங்கள் மற்றும் காற்றாலைகள் மற்றும் சூரிய சக்தி மூலம் மின் உற்பத்தி செய்யும் நிலையங்களை அமைப்பதன் மூலம் அதிகளவு மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும். அந்த சக்தியை இந்தியாவுக்கும் ஏனைய நாடுகளுக்கும் விற்பனை செய்வதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்துக்கு பெரும் பங்களிப்பை பெற்றுக் கொள்ளவும் முடியும். பசுமை வலுசக்தி மற்றும் பசுமை ஐதரசன் என்பவற்றை கொண்டு பசுமை பொருளாதாரத்தையும் உருவாக்க முடியும்.

மன்னாரில் புதிய நீதிமன்ற கட்டடத் தொகுதியை நிர்மாணிப்பதற்கு தேவையான நிதி எதிர்காலத்தில் வழங்கப்படும். புத்தளம் - மன்னார் வீதியை திறப்பது குறித்தும் கலந்துரையாடி தீர்மானம் எடுக்க முடியும்.

மன்னார் மருத்துவமனைக்கு சி. ரி. ஸ்கான் இயந்திரம் வழங்குவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நவீன விவசாயத்தை உருவாக்குவதற்கான முறையான திட்டத்தை ஆரம்பித்துள்ளோம். அதற்குத் தேவையான வசதிகளை பெற்றுக்கொள்வதற்கு அபிவிருத்தி குழு கூடி கலந்துரையாடி ஆலோசனைகளை வழங்குமாறு அறிவுறுத்துகிறேன். இந்தப் பிரதேசத்தில் உள்ள குளங்களைப் பாதுகாப்பதற்கும் மல்வத்து ஓயா திட்டத்தில் இருந்து மன்னாருக்கு வரும் நீரை பாதுகாப்பதற்கும் முறையான வேலைத்திட்டமொன்று விரைவாக தேவைப்படுகிறது.

அடுத்த ஐந்து தசாப்தங்களுக்குள் உலர் வலய பகுதிகளில் மழை அதிகரிக்கும் என்றும் வறண்ட பகுதிகளுக்கு மழை கிடைக்காமல் போகும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. அதற்கான தீர்வு களை இப்போதிருந்தே தேட ஆரம்பிக்க வேண்டும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

# தேர்தலை சுதந்திரக் கட்சி கூட்டணியாகவே சந்திக்கும்!

## அமைச்சர் மகிந்த தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 17

சிறீ லங்கா சுதந்திர கட்சியின் முன்னாள் தலைவர் கட்சியை வீழ்ச்சி பாதைக்கு கொண்டு வந்திருக்காவிடின் ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளரை நிறுத்தியிருப்போம். எதிர்வரும் தேர்தலை கூட்டணியாகவே சந்திப்போம் - இவ்வாறு அந்தக் கட்சியின் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், சிறீ லங்கா சுதந்திரக்கட்சி வீழ்ச்சிப் பாதையில் இருந்து மீண்டு வருகிறது. எமது அரசியல் நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்துவருகின்றோம் - மாவட்ட ரீதியில் மாபெரும் மக்கள் சந்திப்புகளை நடத்தி வருகின்றோம்.

அண்மையில் அம்பாந்தோட்டை பகுதியில் மக்கள் சந்திப்பை நடத்தியிருந்தோம். அம்பாறை, பதுளை, புத்தளம், குருநாகல் மாவட்டங்களில் விரைவில் மக்கள் சந்திப்புகளை நடத்துவோம்.

சிறீலங்கா சுதந்திர கட்சியின் முன்னாள் தலைவர் கட்சியை வீழ்ச்சிப் பாதைக்கு கொண்டு சென்றிருக்காவிடின் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர் ஒருவரை நிறுத்தியிருக்க முடியும்.

எதிர்வரும் தேர்தலில் எவருடன் கூட்டணி அமைப்பது என்பது தொடர்பாக இதுவரை தீர்மானிக்கவில்லை. கட்சி ரீதியாகவே தீர்மானம் மேற்கொள்வோம் - என்றார். (ஐ)

## வழக்கை முடிவுறுத்துவதற்காக...

சுமந்திரன் ஊடகங்களுக்கு அறிவித் தார். இதன்போதே அவர் மேற்கண்ட விடயத்தைத் தெரிவித்தார்.

கூட்டத்தில் தமிழ் அரசு கட்சியின் வழக்கு தற்போது எந்த நிலையில் உள்ளது என்பது தொடர்பான விளக்கம் அனைவருக்கும் வழங்கப்பட்டது.

கடந்த தவணையில் எதிராளிகளாக பெயரிடப்பட்ட ஏழு பேருடன் கிளிநொச்சியை சேர்ந்த ஜீவராஜா என்பவர் தன்னையும் இணைத்துக் கொள்ளுமாறு விண்ணப்பம் செய்திருந்தார்.

அவரின் விண்ணப்பம் தொடர்பாக ஆட்சேபனைகள் இருப்பின், அந்த ஆட்சேபனைகளை தெரிவிப்பதற்காக, கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, சீ. யோகேஸ்வரன் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி அவகாசம் வழங்குமாறு தவணை கேட்டிருந்தார். நானும் அப்படி கேட்டிருக்கின்றேன். இதனையடுத்து எதிர்வரும் ஜூலை 19ஆம் திகதிக்கு வழக்கு அழைக்கப்படவுள்ளது.

அந்த வகையில், கடந்த தவணைக்கு முன்பாக கட்சியின் மத்திய செயல் குழு எடுத்த தீர்மானத்துக்கு அமைய வழக்கை முடிவுறுத்துவது தொடர்பாக நீதிமன்றிலே நான் கூறியிருக்கின்றேன். எதிராளிகள் அழைத்துள்ள ஆட்சேபனைகள் தொடர்பாக வழக்காளி தன் நிலைப்பாட்டை தெரியப்படுத்த வேண்டும் என்ற காரணத்துக்காகவே கடந்த தவணை வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதுபோன்ற சிவில் வழக்குகள் தாக்கல் செய்யப்படும்போது அதில் பல படிமுறைகள் உள்ளன. அவற்றை கடந்த பின்னரே வழக்கு விசாரணைக்கு நியமிக்கப்படலாம். சாதாரணமாக இவ்வாறான வழக்கில் ஒரு வருடத்துக்கு பின்னரே முதலாவது விளக்கத்துக்கான திகதி குறிக்கப்படும். ஆனால், இந்த வழக்கில் வழக்கை முடிவுறுத்த வேண்டும் என்ற நோக்கத்துக்காக நாங்கள் குறுகிய தினத்தை கேட்டிருக்கின்றோம்.

அன்றைய தினம் வழக்காளி நீதிமன்றிலே தெரிவித்த விடயத்துடன், எதிராளிகள் ஏழு பேரும் அழைத்திருக்கின்ற ஆட்சேபனைகளின் அடிப்படையில் மூன்று வித்தியாசமான நிலைப்பாடுகள் எடுக்கப்பட்டன.

குறிப்பாக, நானும் கட்சியின் பொதுச்செயலாளரும் நிர்வாக செயலாளரும் ஒரு நிலைப்பாட்டையும், மாவை சேனாதிராசா, யோகேஸ்வரன் ஆகியோர் வேறொரு நிலைப்பாட்டையும் சிறீதரன், குகதாசன் ஆகியோர் இன்னொரு நிலைப்பாட்டையும் எடுத்திருப்பது சுட்டிக்காட்டப்பட்டது. இதனால் கட்சி ஒரு பொதுவான நிலைப்பாட்டை எடுக்காத சூழ்நிலையில் நாங்கள் எப்படி எமது நிலைப்பாட்டை இதற்கு தெரியப்படுத்துவது என்று அவர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர்.

இருப்பினும், கட்சி தற்போது ஒரு நிலைப்பாட்டுக்கு வந்துள்ளது. வழக்காளி கோரும் நிவாரணங்களை வழங்கி தெரிவுகளை மீள செய்வதற்கு நான் இணங்குகின்றேன் என்று சிறீதரன் கூறியிருந்தார். அதனை நீதிமன்றிலே நான் சொல்லியிருக்கின்றேன்.

இப்போது நாங்கள் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வந்துள்ள காரணத்தால் நாங்கள் ஏழு பேரும் எட்டாவது எதிராளியான ரத்தின வடிவேலும் இணைந்து, வழக்கிலே எமது மறுமொழியை ஒரு நிலைப்பாடாக பதிவுசெய்து வழக்கை முடிவுறுத்துவதற்காக வழக்காளியோடு இணக்கப்பாட்டுக்கு வருகிறோம் என்று கூறி வழக்கை முடிவுறுத்துவதற்கு தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்காக வழக்காளியின் சட்டத்தரணியோடு நான் பேசியிருக்கின்றேன். ஏனையவர்களின் சட்டத்தரணிகளுடன் பேசி பொது நிலைப்பாட்டுக்கு இணங்கிக் கொள்வதுடன், ஜூலை 14ஆம் திகதி வவுனியாவில் மத்திய குழு மீண்டும் கூடி அந்த மறுமொழியின் வரைவை மத்திய செயல் குழுவுக்கு சமர்ப்பித்து அதன் அங்கீகாரத்தை பெறவேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட வரைவை வரும் தவணையில் நீதிமன்றில் சமர்ப்பித்து, அதன் பின்னர் ஓர் இணக்கப்பாட்டுக்கு வரலாம் என்று தீர்மானித்திருக்கின்றோம் - என்றார். (ஐ)

## 442பேருக்கு...

நடைபெற்றது.

உறுமய திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டத்துக்கு 5,000 காணி உறுதிகள் வழங்கப்படவுள்ளன. இதில், 442 உறுதிப்பத்திரங்களே நேற்று வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது விவசாயிகளுக்கான கடன் திட்டம் மற்றும் காப்புறுதிக்கான காசோலைகளும் வழங்கப்பட்டன. (ஐ)

## தற்போதைய...

சபை முறைமையை தீர்வாக ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இந்தநிலையில் மாகாண சபையானது தமக்கு கிடைத்த உரிமை என தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்கள் நம்புகின்றன. எனவே, அந்த முறைமையை நீக்குவது தேவையற்ற பிரச்னைகளை உருவாக்கும்.

இனப்பிரச்னைக்கு இடைக்கால தீர்வாக மாகாண சபை முறை தொடர்ந்து முன்னெடுக்கப்படும். எனினும், அது நிரந்தர தீர்வாகாது என்ற அடிப்படையில், நிரந்தர தீர்வைக் கண்டறியும் வரை அந்த முறையை தற்போதைய வடிவத்தில் தொடர்வதே தமது கட்சியின் கொள்கை. எனவே, நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் இனவாதம் தோல்வியுற்றிருக்கும் - என்றார். (ஐ)

## மாவையை...

கூட்டம் வவுனியாவில் தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், "கட்சி விவகாரம் தொடர்பான வழக்கு விசாரணைகள் நடக்கும் சூழலில் நீங்கள் தலைவராக இருக்கிறீர்கள்... உங்களுக்கு சூடு சொறணை இல்லையா?" என்று மாவை சேனாதிராசாவை பார்த்து சுமந்திரன் கேட்டார் என்று கூறப்படுகின்றது.

சுமந்திரனின் இந்த கேள்விக்கு அங்கிருந்த மாவை சேனாதிராசாவின் மகன் கலையமுதன், "இந்தச் சிக்கல்களுக்கு நீங்கள்தானே காரணம்...", என்று சுமந்திரனை பார்த்து கூறியுள்ளார்.

இதைத் தொடர்ந்து இருவருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

அந்த சமயம், கலையமுதன் இந்தக் கூட்டத்தில் எவ்வாறு பங்கேற்க முடியும் என்று பொதுச் செயலாளராக தற்காலிகமாக பணியாற்றிவரும் சத்தியலிங்கத்தை பார்த்து சுமந்திரன் கேள்வி எழுப்பினார்.

இந்த சமயத்தில் குறுக்கிட்ட கலையமுதன், மத்திய குழுவில் அங்கத்துவம் பெறுவதற்காக தன்னால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் தொடர்பில் பகிரங்கப்படுத்துமாறு சத்தியலிங்கத்தைப் பார்த்து கூறியுள்ளார்.

இந்த நிலையிலும் சத்தியலிங்கம் அமைதி காத்ததால் கலையமுதன் கூட்டத்திலிருந்து வெளியேறினார் என்றும் அறிய வருகின்றது. (ஐ)

## ஐக்கிய...

பிரேமதாஸ.

52 நாள் அரசியல் சூழ்ச்சி இடம் பெற்ற காலப்பகுதியில் பிரதமராக பதவி ஏற்குமாறு 71 தடவை அழைப்பு விடுத்த போது தான் கொள்கை சார்ந்த அரசியலை முன்னெடுத்து வருவதால், அதனை நிராகரித்தேன். மக்களின் ஆசியுடனயே நான் பதவிக்கு செல்வேன் என்று குறிப்பிட்டேன்.

நாட்டை வங்குரோத்தாக்கிய ராஜபக்ஷர்களின் பாதுகாவலராக இருக்க விரும்பாத காரணத்தால்தான் பின்னர் ஏற்பட்ட போராட்ட காலப்பகு தியில் பிரதமர் பதவியையோ அல்லது ஜனாதிபதி பதவியையோ ஏற்க மறுத்தேன்.

பூரண முடியாட்சியை தருவதாகக் கூறினாலும் நாட்டை வங்குரோத்து செய்தவர்களுடன் சஜித் பிரேமதாஸவுக்கு டீல் இல்லை. டீல் போடவும் மாட்டோம். இந்நாட்டின் 220 இலட்சம் மக்களுடன்தான் எனக்கு டீல் இருக்கிறது என்றும் சஜித் பிரேமதாஸ நேற்று அநுராதபுரத்தில் நடைபெற்ற விவசாயிகள் மாநாட்டில் தெரிவித்தார். (ஐ)

## மடு...

வழிபட வருவோருக்காகவே அமைக்கப்பட்டுள்ளன. வனவளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டை மீறினர் என்று அவர்களை கைது செய்து தண்டப்பணம் அறவிடுவது நியாயமற்றது. மடு தேவாலயத்தில் வழிபாட்டுக்காக வருவோர் கைது செய்யப்படும்பட்சத்தில் உடனடியாக அது குறித்து ஜனாதிபதி பணிமனைக்கு அறிவிக்கும்படியும் ஜனாதிபதி இதன்போது கூறினார்.

மடு தேவாலயத்தை வழிபட வருவோருக்காக தேவாலய நுழைவு வீதியின் இரு புறங்களையும் தூய்மைப்படுத்தி அபிவிருத்தி பணிகளை செய்யுமாறு இராணுவத்தினரை ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார். இந்த பணிகளுக்காக மன்னார் மறை மாவட்ட ஆயரின் பிரதிநிதி ஒருவர், வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினர், வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் மற்றும் பொலிஸாரை தொடர்புபடுத்தி செயல்படுமாறும் அவர் கூறினார்.

எதிர்வரும் நாட்களில் நடக்கவிருக்கும் மடு தேவாலய திருவிழாவுக்கு முன்னதாக தூய்மைப்படுத்தல் பணிகளை நிறைவு செய்யுமாறும் ஜனாதிபதி உத்தரவிட்டார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# வீரமுனை நிகழ்வில் பங்கேற்பதற்கு பிள்ளையானுக்கு நீதிமன்றம் தடை!

## தமிழ் - முஸ்லிம் மக்களிடையே இன முறுகல்

வீரமுனை, ஜூன் 17

**கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனுக்கு நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது. அம்பாறை - சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட வீரமுனை கிராம வீதி வரவேற்பு கோபுர அடிக்கல் நாட்டும் நிகழ்வில் ஏற்பட்ட இன முறு கல் நிலையையடுத்தே பிள்ளையானுக்கு இவ் வாறு தடை விதிக்கப்பட்டுள்ளது.**

நீதிமன்ற உத்தரவை சம்மாந்துறை பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று வாசித்து காட்டியதுடன் அந்தப் பகுதியில் இடம்பெறவிருந்த பதற்ற நிலைமையை சீர் செய்தனர்.

மேலும் கடந்த வெள்ளிக்கிழமை சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் வீரமுனை வரவேற்புக் கோபுரம் அமைப்ப தற்கு எதிராக இருவரால் முறைப்பாடு செய்யப்பட்டதற்கு அமைய நீதிமன்ற தடை உத்தரவு பெறப்பட்டிருந்தது.


சம்மாந்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதி காரி பிரதான பொலிஸ் பரிசோதகர் நௌபர், மன்றிக்கு சமர்ப்பித்த அறிக்கையின் பிரகாரம் நேற்று முன்தினம் சனிக்கிழமை சம்மாந்துறை பொலிஸ் பிரதேசத்துக்குட் பட்டதும் சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற நியாயா திக்க எல்லைக்குட்பட்ட சம்மாந்துறை ஆண்டியடி சந்தி எனும் இடத்தில் வீரமுனைக்கு செல்லும் வீதியில் வீர முனை பிரதேசவாசிகளால் வரவேற்பு கோபுரம் ஒன்று அமைப்பதற்கு அடிக்கல் நாட்டு விழாவை நடத்துவத னால் தமிழ் - முஸ்லிம் மக்களுக்கு இடையில் இனக் கலவரம் ஒன்று ஏற்படுவதற்கு சாத்தியமுள்ளது. பொது மக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் மற்றும் சமாதான குலைவு ஏற்படக்கூடிய சாத்தியமுள்ளதாலும் பொதுமக் களின் போக்குவரத்துக்குத் தடைகள் ஏற்படக் கூடிய சாத் தியமுள்ளதாலும் இவ் நிகழ்வை நடத்துவது உசிதமா னது அல்ல என்பதனால் இந்த நிகழ்வை நடத்தாமல் தடுத்து நிறுத்துமாறு கோரிக்கை விடுத்தார்.

அத்தோடு, இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், வீரமுனை கோவில் தலைவர் ராஜகோ பால், கிராம உத்தியோகத்தர் பிரதீபன் உட்பட சிலருக்கு கோபுரம் அமைப்பதற்கு தடை உத்தரவு பிறப்பிக்குமா றும் தாக்கல் செய்த மனுவுக்கு அமைவாக தடை உத்த ரவு பிறப்பிக்கப்பட்டது.

அத்துடன் குறித்த இடத்துக்கு இராஜாங்க அமைச் சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் வருகை தந்திருந்தார். இந்த நிலையில் சம்மாந்துறை பொலிஸாரால் நீதிமன்ற தடை உத்தரவு வாசிக்கப்பட்டது. இதனையடுத்து இராஜாங்க அமைச்சர் அமைதியாக அந்த இடத்தை விட்டு சென்றார். இதே வேளை வீரமுனை பிரதேச மக்களால் குறித்த நீதிமன்ற உத்தரவை மீறி கம்பி கூடுகள் நாட்டப்பட்டன.

இதனால் முஸ்லிம் - தமிழ் இனத்தவர்களுக்கு இடை யில் கைகலப்பு ஏற்பட்டது. பொலிஸார் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து குறித்த இடத்துக்கு பொலிஸ் உயர் அதிகாரியின் வேண்டுகோளுக்கு இணங்க பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (எ)

## கடற்படையால் ஆறு மாதங்களில் 600 கிலோ போதைப்பொருள் மீட்பு



காலி, ஜூன் 17

இந்த ஆண்டு இதுவரையான காலப்பகுதியில் 600 கிலோ கிராம் போதைப்பொருளை கைப்பற்றியுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

9, 460 மில்லியன் ரூபாய்க்கும் அதிக பெறுமதியான ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற் றப்பட்டுள்ளதாக கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா கூறினார்.

நெடுநாள் படகில் சூட்சுமமான முறையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 3,250 மில்லியன் ரூபாய்க்கும் அதிக பெறுமதியான 131 கிலோ ஹெரோயின் போதைப்பொ ருளுடன், 06 சந்தேகநபர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இந்த போதைப்பொருட்களை பார்வையிட காலி துறைமுகத்துக்கு வருகை தந்திருந்த போதே கடற்படை தளபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# கிரிக்கெட் சபையின் தலைவர் பதவிக்கு வாக்கெடுப்பு இல்லை

கொழும்பு, ஜூன் 17

இலங்கை கிரிக்கெட் சபைக்கு புதிய யாப்பை தயா ரிப்பதற்காக நியமிக்கப்பட்ட "நீதியரசர் சித்ரசிறி குழு வின்" அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

இதேவேளை, கிரிக்கெட் சபைக்கு தலைவரை தெரிவு செய்யும் போது விளையாட்டு சங்கங்கள் தேர்தலை நடத்தக்கூடாது என அந்த அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

மேலும், 18 பேர் கொண்ட கிரிக்கெட் அதிகாரிகள் சபைக்கு சர்வதேச கிரிக்கெட் போட்டியில் விளையா டிய ஐந்து வீரர்களும் சேர்க்கப்பட வேண்டும் என நீதி யரசர் சித்ரசிறி குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் அணி வரலாற்றில் முதல் தட வையாக ரி- 20 உலகக் கிண்ணப் போட்டியின் முதல் சுற்றுடன் வெளியேறியுள்ளது.

அத்துடன், கடந்த வருடம் நடைபெற்ற ஆசியக் கிண்ண மற்றும் இந்தியாவில் நடைபெற்ற ஒருநாள் உலகக் கிண்ணப் போட்டியிலும் இலங்கை அணிக்கு பெரும் பின்னடைவு ஏற்பட்டதையடுத்து, வீரர்களுக் கும், கிரிக்கெட் நிர்வாகத்தினருக்கும் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

அப்போதைய விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க, கிரிக்கெட் நிர்வாகத்தை மாற்றி கடந்த வருடம் நவம்பர் மாதம் 5ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தல் ஊடாக இடைக்கால நிர்வாக சபையொன்றை நியமித்திருந்த நிலையில், மேன்முறையீட்டு நீதிமன்றம் அதற்கு இடைகால தடை விதித்திருந்தது.

அன்றைய தினம் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத் தில், அமைச்சர் அலி சப்ரி தலைமையில் அமைச்சர்க ளான காஞ்சன விஜேசேகர, மனுஷ நாணயக்கார மற்றும் டிரான் அலஸ் ஆகியோர் அடங்கிய அமைச்சரவை உபகுழுவொன்றை ஜனாதிபதி நியமித்தார்.

அதாவது இலங்கையில் கிரிக்கெட் எதிர்கொள்ளும் பிரச்னைகளை கண்டறிந்து அது தொடர்பான பரிந்து ரைகளை வழங்க வேண்டும்.

அந்த பரிந்துரைகள் மூலம் பல யோசனைகள் முன் வைக்கப்பட்டன.

அதன்படி, இலங்கை கிரிக்கெட்டின் அமைப்பு மற் றும் கட்டமைப்பை மறுசீரமைத்தல்.

தேசிய ஆண்கள் மற்றும் பெண்கள் அணிகள், 19 வய துக்குட்பட்ட மற்றும் 17 வயதுக்குட்பட்ட பிரிவுகள் உட்பட பல்வேறு நிலைகளில் உள்ள வீரர்களின் நிர்வா கம், பயிற்சி மற்றும் நலன்.

இலங்கை கிரிக்கெட் விளையாட்டில் ஒழுக்கம் மற் றும் வெளிப்படைத்தன்மை, தொழில்முறை, பொறுப் புக்கூறல் போன்றவற்றை ஊக்குவித்தல்.

திறமை, சமத்துவம் மற்றும் நியாயத்தை தழுவி பாட சாலை, மாவட்டம், மாகாண மற்றும் சமூக மட்டங்க ளில் கிரிக்கெட்டை சீர்திருத்துதல்.

இந்த அமைச்சரவை உபகுழுவின் பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையின் அடிப்படையில் கடந்த பெப்ர வரி மாதம் 13ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்துக்கான புதிய யாப்பை உருவாக்க நிபுணர் குழுவொன்றை நிய மிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் கே. டி. சித்ர சிறி தலைமையிலான நிபுணர் குழுவில் ஜனாதிபதியின் சட்டத்தரணி ஹர்ஷ அமரசேகர, சட்டத்தரணி கலாநிதி அரித்த விக்கிரமநாயக்க, இலங்கை வர்த்தக சபையின் தலைவர் துமிந்த ஹுலங்கமுவ, பிரதி சொலிசிற்றர் ஜென ரல் மனோகர ஜயசிங்க, உதவி சட்ட வரைவு நிபு ணர் ஷமிலா கிருஷாந்தி ஆகியோர் அங்கம் வகித்தனர்.

இதன்படி, கிரிக்கெட் யாப்பை மாற்றி அரசியல் மற்றும் பிற தலையீடுகள் இன்றி கிரிக்கெட் நிறுவனத் தின் செயல்பாடுகளை தொடர நீதியரசர் சித்ரசிறி குழு பரிந்துரை செய்துள்ளது.

18 பேர் கொண்ட கிரிக்கெட் சபைக்கு தலைவர் உள் ளிட்ட உறுப்பினர்கள் நியமனம், விளையாட்டு சங்க வாக்கெடுப்பு இல்லாமல் நடக்க வேண்டும் என்பது இதன் மற்றொரு பரிந்துரையாகும். (எ)

## ஐஸ் போதைப்பொருளுடன் சிறைச்சாலை அதிகாரி கைது

கொழும்பு, ஜூன் 17

கொழும்பு, அகுணுகொலபலஸ்ஸ சிறைச்சாலையின் அதிகாரி ஒருவர் ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மொறட்டுவை, மாதங்கஹவத்தையிலுள்ள வீடொன் றில் வைத்தே சந்தேக நபர் 90 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் அஹங்கம தித்தகல்ல பகுதியில் வசிக் கும் 26 வயதுடையவர் ஆவார்.

இவர் மொறட்டுவை நீதிவான் நீதிமன்றில் இன்று முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.

இது தொடர்பில் மொறட்டுவை தலைமையக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின் றனர். (எ)

## நடிகர் ரஜினிகாந்தை சந்தித்தார் ஆளுநர் செந்தில் தொண்டமான்



விஜயவாடா, ஜூன் 17

இந்தியா சென்றுள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செந் தில் தொண்டமான் விஜயவாடாவில் நடிகர் ரஜினிகாந்தை சந்தித்தார்.

மலையக மக்களின் இலங்கை வருகையை நினைவூட் டும் 200 ஆவது ஆண்டு நினைவு முத்திரையை ரஜினி காந்துக்கு இதன்போது ஆளுநர் செந்தில் தொண்டமான் வழங்கினார். (எ)

## வேலையற்ற பட்டதாரிகள் கவனவீர்ப்பு போராட்டம்

ஹற்றன், ஜூன் 17

அரச வேலைகளை வழங்குமாறு கோரி பெருந்தோட்ட வேலையற்ற பட்டதாரிகளால் நேற்று ஞாயிற்றுக்கி ழமை ஹற்றன் நகரில் கவனவீர்ப்புப் பேரணியும் போராட் டமும் முன்னெடுக்கப்பட்டது.

ஹற்றன் நகர மத்தியிலிருந்து ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டப் பேரணி ஹற்றன் மல்லியப்பு சந்தி வரை சென்று அங்கு போராட்டம் இடம்பெற்றது.

தற்போது தோட்டப் பகுதியிலுள்ள அனைத்து அரச பாடசாலைகளிலும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாக வும், அந்த ஆசிரியர் பற்றாக்குறையை நிரப்புவதற்கு வேலையற்றிருக்கும் பட்டதாரிகளுக்கு ஆசிரியர் பதவி களை வழங்க முடியும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்ட பட்டதாரிகள் தெரிவித்தனர்.

மேலும், பல்வேறு அரசு பணிகள், பதவிகளை பட்ட தாரிகளாக உள்ள தமக்கு வழங்க நடவடிக்கை எடுக்கு மாறும் இதன்போது போராட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.06.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.